Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 20 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர்தரத்துடனும் குறைந்த செலவுடனும் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 18 புதன்கிழமை (01.04.2015) | பக்கங்கள் 20 | ஓசை – 183

## கப்ராலிடம் விசாரணை; மசகு எண்ணை விவகாரம்

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜிட் நிவாட் கப்ராலிடம் கொழும்பு, கொள்ளுப்பிட்டி நிதி மோசடி விசாரணைப்பிரிவு சுமார் நான்கரை மணிநேரம் விசாரணை நடத்தியுள்ளது. மகிந்த ராஜபக்ஷ வின் ஆட்சிக்காலத்தில் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை கூடி, குறைந்து கொண்டிருந்த போது இலங்கைக்கு பாதகத்தை ஏற்படுத்தாமல் சர்வதேச வங்கி மற்றும் நிதி நிறுவனங்களுடன் செய்து கொண்ட ஹெஜிங் ஒப்பந்தத்தினால் இலங்கைக்கு கோடிக்கணக் கான டொலர்களை செலுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது தொடர்பிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக சந்தை எவ்வாறிருப்பினும் ஒரு பரல் மசகு எண்ணெய் 130 டொலர் ஆகும்.டொலர் விலையில் வாங்குவதாக அரசாங்க நிறு வனமான பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2007ஆம் ஆண்டு 5 உள் நாட்டு, வெளிநாட்டு வங்கிகளுடன் ஒப்பந்தம் செய்தது. ஆனால், உலக சந்தையில் பெற்றோலிய விலை 50 (19) ஆம் பக்கம் பார்க்க

## தமிழர் பிரச்சினையை ஆராய ஜனாதிபதி செயலணி உதயம்



### வாய்ப்புக்களை பயன்படுத்த தவறக்கூடாது

சிறுபான்மையினரின் பிரச்சி னைகளை ஆராயுமுகமாக முன் னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண் டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் விசேட ஜனா திபதி செயலணிப் பிரிவு அமைத் திருப்பதை வரவேற்பதாக ஈழ மக் கள் ஜனநாயகக் கட்சியின் செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை கொழும்பில் தமிழ் பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் மற்றும் கல்விச் சமூகப் பிரதிநிதிகள் மத்தியில் இடம்பெற்ற கலந்துரை யாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள செய (19) ஆம் பக்கம் பார்க்க

# இனியும் ஏமாறவேண்டாம் மக்கள் விழிப்படையவேண்டும்



(யாழ்ப்பாணம்)

பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றி அழிவுக்குக் கொண்டு செல்வதுடன் அரசியல் பயங்கரவாத செயற் பாடுகளை மேற்கொள்ளும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக் கப்படவேண்டும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளின் செயற்பாடுகள் குறித்து குற்றம் சுமத்தினார்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது தனது பெயருக்கு துரோகமாகவே செயற்படுகின்றது.சிங்கக் கொடி ஏந்துவதும், சுதந்திர தினத்தில் கலந்து கொள்வதும், அரசின் பங்காளிக் கட்சியாக செயற்படு வதும் சரியானதா தேசியம் பற்றி தெரியாத இவர்கள் கட்சிக்கு தேசிய என்ற சொல்லுக்கே இடமில்லை.

சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி செயலணி ஒன்று உருவாகியுள்ளதாகவும் இது தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் என சம்பந்தன் நம்பிக்கை கொண்டுள்ளார்.

சந்திரிகா பெரும்பான்மையாக அதாவது 62வீதம் வாக்குப்பெற்று சாதனையாளராக இருந்தபோது, அவர் நியாயமான

நேர்மையான தமிழ் (19) ஆம் பக்கம் பார்க்க

## இராணுவ வீரர் மரணம்

வல்வெட்டித்துறை சமரபாகு இராணுவ முகா மைச் சேர்ந்த இராணுவ வீரர் ஒருவர் நேற்று பயிற் சியின் போது மயங்கி வீழ்ந்து, உயிரிழந்ததாக பலாலி இராணுவத் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

19ஆவது சிங்க றெஜிமெண்ட் படைப்பிரிவி லுள்ள, குருநாகலைச் சேர்ந்த பிரசன்ன ஜய வத்த (வயது-23) என்ற இராணுவ வீரரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

முகாமில் நேற்று இடம்பெற்ற பயிற்சிகளில் ஈடுபட்டசமயம் மயங்கி விழுந்துள்ளார். அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது உயிரிழந்துள்ளார். அவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## கள்ள மரம் கடத்தல் பிரதேசசபை உறுப்பினர் மீது வழக்கு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் தமிழ்த்தேசியக் கூட் டமைப்பின் பிரதேசசபை உறுப் பினர் நடராசா டெனிஸ்ராஜ் மரம் கடத்தியபோது கையும் கள வுமாக அக்கராயன் பொலிஸா ரால் பிடிக்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரிடம் கையளிக்கப் பட்டு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற் படுத்தப்பட்டு, பிணையில் விடு தலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிய வரு வதாவது,

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் களவாக மரம் வெட்டி கடத்திச் சென்ற போது மக்களின் உதவியுடன் அக்கரா யன் பொலிஸாரால் கரைச்சி பிரதேச சபை பொது உறுப்பி னர் நடராசா டெனிஸ்ராஜ் என்ப வர் கைது செய்யப்பட்டு கிளி நொச்சி பொலிஸாரிடம் ஒப் படைக்கப்பட்ட நிலையில் குறித்த பிரதேச சபை உறுப்பினரையும் (19) ஆம் பக்கம் பார்க்க

## கோடரிவெட்டு பளையில் ஒருவர் காயம்

பளை வேம்பொடுகேணிப் பகுதியில் குடும்பஸ தர் ஒருவர் கோடரி வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இரு பகுதியினருக்கிடையில் ஏற் பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதில் கோடரி வெட்டு இடம்பெற்றதாகவும், அதன்போது இதே (19) ஆம் பக்கம் பார்க்க

### - அரசியல் அமைப்பின் 19ஆம் திருத்தம் -

## நீதிபதிகள் குழாம் விசாரணை செய்யும்

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் 19ஆம் திருத்தச் சட்ட மூலத்துக்கு எதி ராக தாக்கல் செய்யப்பட்ட மனுக் கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்ற நீதி பதிகள் மூவர் அடங்கிய விசேட நீதிபதிகள் கொண்ட குழாம் ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

இக்குழுவினர் மேற்படி மனுக் கள் தொடர்பான தமது விசா ரணைகளை இன்று ஆரம்பிக் கின்றனர்.

இந்தக் குழுவின் தலைவ ராக பிரதம நீதியரசர் கே.ஸ்ரீ (19) ஆம் பக்கம் பார்க்க

அவதானம்
இன்று
முட்டாள் தினம்

## வரிச்சலுகை கிடைக்க வாய்ப்பு



### ஆராய்கிறது ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

இலங்கையின் உற்பத்திகளுக்கு மீண்டும் வரிச்சலுகையை வழங்குவது தொடர்பாக ஐரோப் பிய ஒன்றியம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

அனேகமாக மிகவிரைவில்இதற்கான அனும தியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் உறு தியளிக்கப்பட்டிருக்கிறது.

நிறுத்தப்பட்டுள்ள ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை மீண்டும் இலங்கைக்கு வழங்குவது தொடர்பில் தாம் கூடிய கவனம் செலுத்துவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபாலவை நேற்று சந்தித்த இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூது வர், இதனைத் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் (19) ஆம் பக்கம் பார்க்க

# பேருந்து மீதான தாக்குதல்களால் சேவைகள் ஸ்தம்பிதம்

கிளிநொச்சி, கண்ணகைபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேருந்து விபத்தை தொடர்ந்து நேற்று வரை பேருந்து சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

விபத்து இடம்பெற்றதைக் காரணம் காட்டி பேருந்தின் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர். அக்கராயன் பகுதியிலிருந்தும் அக்கராயன் ஊடாகவும் சேவையில் ஈடுபடும் அரச பேருந்துகளே இவ்வாறு ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இடம்பெற்ற பேருந்து விபத்தினைக் காரணம் காட்டி அக்கராயனி லிருந்து யாழ்ப்பாணம் வருகின்ற பேருந்து வண்டிகளின் மீதே இவ்வாறு தாக்குதல்கள் நடாத்தப்படுவதாகத் தெரியவருகின்றது. (69)

# திருநகர் பகுதியில் ஆட்டோ எரிப்பு



யாழ்.திருநகர் பகுதியில் நேற்று முன்தினமிரவு ஆட்டோ ஒன்று இனந்தெரியாத நபர்களால் தீயிட்டு கொழுத்தப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு குறித்த ஆட்டோ திருநகர் விளையாட்டு மைதானமருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வேளை இனந்தெரியாதோர் தீயிட்டு கொழுத்தியுள்ளனர்.

இரவு 1 மணியளவில் இவ்வாறு ஆட்டோ முற்றாக எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ,ப)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | புதன்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம் (பக்திப் பாடல்கள்) |
| Am 07.00 | காலைக் கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | கொஞ்சம் கலாட்டா |
| Am 09.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | ஆரோகனம் |
| Am 10.30 | சிரிக்க சிரிக்க |
| Am 11.30 | அதிர்வுகள் |
| PM 12.30 | Hello DD |
| PM 01.00 | மதிய செய்திகள் |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்திகள் |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

## கருத்துரையும் கலந்துரையாடலும்

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் "மாற்று சிந்தனையும் மக்கள் வாழ்வும்" எனும் தலைப்பில் கருத்துரையும் கலந்துரையாடலும் நடத்தவுள்ளது.

இந் நிகழ்வின் தொடக்கவுரையினை இ.ஸ்ரீகரனும், கருத்துரையினை ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் இ.சர்வேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இக்கருத்துரையினைத் தொடர்ந்து பங்குகொள்வோர் கலந்துரையாடல் நடைபெறும் சமூக இலக்கிய, விஞ்ஞான ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


# INVITATION FOR BIDS

# University of Jaffna

## Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the University of Jaffna-2015

1. The Chairperson, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up to **2.00 p.m.** on **16th April, 2015** from the eligible Firms.

| Contract No | Service | Contract period |
|---|---|---|
| UJ/MB/2015/CS/01 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Kanagasundram Male Hostel and Sivagnanasundram Female Hostel at Jaffna Town, University of Jaffna-2015 | 12 Months |
| UJ/MB/2015/CS/02 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Buildings in various Locations in Jaffna, University of Jaffna-2015 | 12 Months |
| UJ/MB/2015/CS/03 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Rented Hostels in Various Locations in Jaffna, University of Jaffna-2015 | 06 Months |
| UJ/MB/2015/CS/04 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Male and Female Hostels of Siddha Medicine Unit at Kaithady, University of Jaffna- 2015 | 12 Months |

2 Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.

**3.1**-Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.

**3.2**.-Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than **Rs. 1.0 Million** for contracts No1 &2 each and **Rs. 0.6 Million** for contract No 3 & 4 each.

**3.3** - Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years should be at least **Rs. 1.5 Million** for contracts No 1& 2 each and **Rs. 1.0 Million** for contract No 3 & 4 each.

**3.4**-Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least **10 employees** for bid No. 1, 2 & 3 each and 5 employees for bid no. 4.

3. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Unit, and University of Jaffna and inspect the bidding documents at the same address on any working day from 9:00 hrs to 16:00 hrs. Contact numbers are: Phone. Tel: 021 2219201 Fax: 021 221 9201.

4 .A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, **from 01.04.2015 until 15.04.2015** from 9:00 hrs to 15:00 hrs upon payment of a **non refundable fee of Rupees one thousand five hundred (Rs.1,500/-) for bid No.1 & 2 each and rupees one thousand (Rs.1000/-) for bid No. 3 & 4 each. Bid Security of Rs. 24,000.00 for contracts No 1 & 2 each and Rs. 12,000.00 for contract No 3 & 4** in Cash or Bank Guarantee valid for 120 days from scheduled bid opening date, obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.

5. Bidders are strongly advised to attend the **pre-bid meeting on 09.04.2015 at 10.00 am** in the board room of the University of Jaffna and visit each location before pricing.

6.Bids shall be delivered or sent by registered post to the Chairperson, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on 16.04.2015 or** be deposited in the tender box kept in the Registrar's office on or before the above date and time. . Bids will be opened soon after closing the Bids, in the presence of the bidders' representatives who choose to attend.

7. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

**Chairperson,**
Procurement Committee,
University of Jaffna, Thirunelvely,
Jaffna.
01.04.2015

(C/3496)

# இடதுசாரிகளும் மாற்றுச் சிந்தனையாளர்களும் என்ன செய்யப் போகிறார்கள்? - 02

● கருணாகரன்

எல்லோருக்குமே வெளிப்படையாகத் தெரிகிறது இன்றைய இலங்கையின் அரசியல் முற்றுமுழுதாக இனவாத மயப்பட்டிருக்கிறது என்று. இந்த அரசியல் ஒரு போதும் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரப்போவதில்லை என்பதும் அனைவருக்கும் தெரியும். ஆனாலும் இனவாத அரசியல்தான் இனிப்பாக இருக்கிறது எல்லோருக்கும்.

இதுதான் பிரச்சினையே.

மது தீங்கானது என்று தெரிந்து கொண்டே அதற்கு அடிமையாக இருப்பதைப்போலத்தான் இதுவும். இந்தப் போதை – இனவாதப்போதை அநேகமான சந்தர்ப்பங்களில் மாற்றுச் சிந்தனையாளர்களையும் இடதுசாரிகளையும் கூட ஆட்கொண்டு விடுகிறது.

இதன்விளைவாக இலங்கையின் இடதுசாரிகளும் மொழிவழியாக இனவாத மயமாகியுள்ளனர் என்று சொல்ல வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

**தமிழ் இடதுசாரிகளில் பலரும் அரச ஒடுக்குமுறையையும் அரசாங்கத்தின் முறைகேடுகள் – அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை எதிர்க்க வேண்டுமானால், தமிழ் இனக்கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொள்கின்றனர். இதை அவர்கள் பகிரங்கமாகச் சொல்லாது விட்டாலும் நடைமுறையில் தமிழ் இனவாதச் சக்திகளுக்கே தமது ஆதரவை வழங்கி, அந்தச் சக்திகளைப் பலப்படுத்துகின்றனர்.**


இனவாத அலைக்குப் பயந்தும் இனவாத அலைக்குத் தாக்குப்பிடித்து நிற்க முடியாமலும் இனவாத அலைக்குள் ஈர்க்கப்பட்டும் அள்ளுப்பட்டும் உள்ளனர் பெரும்பாலான இடதுசாரிகள்.

இதனால் தமிழ் இடதுசாரிகள், சிங்கள இடதுசாரிகள், முஸ்லிம் இடதுசாரிகள் என்ற வகைப்பாட்டில்தான் இன்றைய இடதுசாரிகள் உள்ளனர். அல்லது மாற்றுச் சிந்தனையாளர்களில் பலரும் இயங்குகின்றனர். இதை நாம் தேர்தற்காலங்களில் மிகத் தெளிவாகப் பார்க்கலாம்.

தேர்தலுக்கு முன்னர் தொடர்ச்சியாக இனவாத அரசியலை எதிர்த்துக் கொண்டிருக்கின்ற இடதுசாரிகளும் மாற்றுச்சிந்தனையாளர்களும் தேர்தல் என்று வரும்போது இனவாத அரசியலுக்கு ஆதரவளிக்கின்றனர். இதைக் கடந்து தேசியத் தன்மையுடன், மாற்றுச் சிந்தனை, பொது நிலைப்பாடு என்ற வகையில் எல்லாம் சிந்திப்பதில்லை.

இதனால் இனவாத அரசியலே தொடர்ந்து வளர்ச்சியடைந்து கொண்டு செல்கிறது.

இனவாத அரசியலை முறியடிப்பதற்குப் பதிலாக அதை மேலும் ஊக்கமளித்து வளர்க்கும் நிலை ஏற்பட்டிருப்பது துரதிருஷ்டமானது. இப்படி இனமான அரசியலும் இனவாத அரசியலும் வளர்ந்து கொண்டு போகுமாக இருந்தால் இலங்கையின் எதிர்காலம் மிகப் பெரிய நெருக்கடிக்குள்தான் சிக்கும்.




இன முரண்கள் கூர்மையடைந்து மோதலாக வெடித்தே தீரும். ஆனால், தாம் மேற்கொள்கின்ற அரசியலை எப்படியோ நியாயப்படுத்தியே விடுகின்றனர் பலரும்.

இதற்கு அவர்கள் சொல்கின்ற நியாயங்கள் பெரும்பாலும் சிரிப்பிற்கிடமானவை.

தமிழ் இடதுசாரிகளில் பலரும் அரச ஒடுக்குமுறையையும் அரசாங்கத்தின் முறைகேடுகள் – அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றை எதிர்க்க வேண்டுமானால், தமிழ் இனக் கட்சிகளுக்கே வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொள்கின்றனர். இதை அவர்கள் பகிரங்கமாகச் சொல்லாது விட்டாலும் நடைமுறையில் தமிழ் இனவாதச் சக்திகளுக்கே தமது ஆதரவை வழங்கி, அந்தச் சக்திகளைப் பலப்படுத்துகின்றனர்.

சிங்கள இடதுசாரிகளில் பலரும் இனரீதியாகவே பெரும்பாலும் சிந்திக்கின்றனர். கடந்த அரசாங்கத்தில் பங்கேற்ற இடதுசாரிகளில் பெரும்பாலானவர்கள் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் நகரவில்லை. அரசாங்கத்துக்கு வெளியே இருந்தவர்களும் பொது நிலைப்பட்டு, இனவாதத்தைக் கடந்து சிந்திக்கவில்லை.

இதனால்தான் தமிழ் இடதுசாரிகள், சிங்கள இடதுசாரிகள், முஸ்லிம் இடதுசாரிகள் (முஸ்லிம் இடதுசாரிகள் என்பதை அழுத்தமாகச் சொல்லக் கூடிய அளவில் ஒரு வளர்ச்சி அங்கில்லை என்பது கவனத்திற்குரியது) என தனியான அடையாளம் வைத்துப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

உண்மையில் இடதுசாரிகளுக்கு இப்படியான இன அடையாளமோ மத அடையாளமோ, பால் அடையாளமோ, சாதி அடையாளமோ ஏற்படுவது நல்லதல்ல. அப்படி ஒரு அடையாளம் ஏற்படுமாக இருந்தால் அவர்கள் இடதுசாரிகளாக இருக்கவும் முடியாது. இடதுசாரிய அரசியலைப் பலப்படுத்தி வளர்க்கவும் முடியாது. ஆனால், அப்படியான நிலைதான் – இனவாதத்திற்குச் சேவகம் செய்யும் நிலைதான் – இலங்கையில் ஏற்பட்டுள்ளது.

இனஒடுக்குமுறையை எதிர்ப்பதும் புதிய இலங்கைக்கு ஏற்றமாதிரி, சமூகங்களுக்கிடையிலான ஒருங்கிணைந்த அரசியலை முன்னெடுப்பதும் பிராந்திய, சர்வதேச வல்லாதிக்கச் சக்திகளின் பிடிக்குள் சிக்கிவிடாமல் இலங்கையை முன்னகர்த்துவதும் இடதுசாரிகளின் முன்னுள்ள பிரதானமான பணியாகும்.




மாற்றுச்சிந்தனையாளர்களும் இதைக்குறித்தே சிந்திக்க வேண்டும். ஜனநாயகத்தைப் பலப்படுத்துவது, பொருளாதாரக் கட்டுமானத்தை விருத்தி செய்வது, அதிகாரத்தைப் பகிர்வது, ஒடுக்குமுறையை இல்லாமலாக்குவது, பல்லினச்சமூகங்களின் இருப்பையும் அடையாளத்தையும் உறுதி செய்வது என ஏராளம் பணிகள் இதிலுண்டு.

எவருக்கும் தான் சார்ந்த சூழலின் தாற்பரியத்துக்கு அமைய தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியமான ஒன்றுதான். ஆனால், அந்தத் தீர்மானம் குறுகிய நோக்கிலும் அடிப்படைவாதத் தன்மையோடும் இருப்பது நல்லதல்ல.

இடதுசாரிகளின் முக்கியத்துவம் என்பது எப்பொழுதும் எந்தப் பிரச்சினையையும் அறிவுபூர்வமாகவும், மானுட மேன்மை குறித்தும் மானுட நேசிப்புடனும் அணுகுபவர்கள் என்பதிலேயே உள்ளது. இன, மத, மொழி, பால், பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால், பரந்த தளத்தில் சிந்திப்பதிலும் தேசிய, சர்வதேச அரசியல், பொருளாதார அடிப்படைகளை வைத்து நிகழ்கால – எதிர்கால அரசியலை விஞ்ஞான முறையியலில் முன்னெடுப்பதிலுமே தங்கியிருக்கிறது.

இலங்கையில் இந்த அணுகுமுறையை எத்தனை மாற்றுச் சிந்தனையாளர்களும் இடதுசாரிய அமைப்புகளும் கொண்டிருக்கின்றன?

# அதிபர், ஆசிரியரின் துன்புறுத்தல் இடைவிலகும் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

அதிபர், ஆசிரியரின் துன்புறுத்தலினால் யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதை இடை நிறுத்துவதாக கூறப்படுகிறது.

மேற்படி பாடசாலையின் அதிபர், ஆசிரியர் மாணவர்களைத் துன்புறுத்துவதால் அப்பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை அதே பாடசாலையில் தொடரவிருப்பமின்றி கல்வியை இடை நடுவில் நிறுத்துவதாகவும் இதனால் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை கொண்டு வேறு பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான செயற்பாட்டால் தமது பாடசாலையின் பெயர் கெட்டுப் போவதாக பழைய மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். தமது ஊரிலேயே சிறந்த பாடசாலை இருந்தும் இங்கு கல்வி கற்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தமது பிள்ளைகள் தள்ளப்பட்டுள்ளனர் என்று பெற்றோர் குறிப்பிடுகின்றனர்.

பாடசாலை அதிபரின் முறையற்ற செயற்பாடு காரணமாக பாடசாலை கீழ்த்தரமான நிலைக்குத் தள்ளப்படுவது பற்றி உரிய அதிகாரிகளுக்கு பல தடவை தெரியப்படுத்தியும் இதுவரை காலமும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அதிபரின் இத்தகு செயற்பாட்டிற்கு கல்வி அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பழைய மாணவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## மண்டைதீவு வீரபத்திரர் ஆலய திருப்பணி வேலைகள் முடிவுறும் நிலையில்

(யாழ்ப்பாணம்)


மண்டைதீவு கண்டுப்புளியடி சிவ உக்கிர வீரபத்திரர் ஆலயத்தின் திருப்பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன.

மேற்படி ஆலயத்தின் திருப்பணிகளுக்கான நிதி புலம்பெயர் மண்டைதீவு மக்களிடமிருந்தும் உள்ளூர் மக்களிடமிருந்தும் பெறப்பட்டே திருப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.

யுத்த காலத்தில் அழிவடைந்த ஆலயத்தை மீண்டும் திருத்த வேலை மேற்கொள்ள பரிபாலன சபையினர் முடிவெடுத்ததன் பயனாகவே ஆலயத்தின் திருப்பணிகள் தற்போது முடிவுறும் நிலையில் இருப் பதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

ஆலயத்துடன் இணைந்து பூசகர் தங்குமிடம் மற்றும் மடப்பள்ளி ஆகியவற்றுக்கான கட்டடமும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் திருப்பணி வேலைகளுக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் ஆலயத்தின் பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



கைதடி மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை சிந்தாமணி குடும்பத்தினர் கைதடி மேற்கு உதயநகரைச் சேர்ந்த மூன்று குடும்பத்தினருக்கு தமது சொந்தச் செலவில் கட்டிய தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான வீடுகளை கையளிக்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது... (51)

நம்பிக்கை, முயற்சி, இவைகள் இரண்டும் வெற்றியைக் கொண்டு சேர்க்கும் இரண்டு பாதைகள். -பிராண்டோ

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## முழுத் தகுதியும் உடையவர்கள்!

"நம்மைப் பிறர் முட்டாள் என்று நினைத்துவிட்டுப் போனாலும் பரவாயில்லை, நமக்குத் தெரியாத விஷயங்களில் வாயைத் திறக்காமலிருப்பது நல்லது; வாயைத் திறந்து அவர்கள் நினைத்ததுதான் சரி என்று நிரூபித்துவிடுவதைக் காட்டிலும்" என்று ஓர் அறிஞர் சொல்லியிருக்கிறார்.

இன்று முட்டாள்கள் தினத்திற்கென எதையாவது எழுதலாமே என்று நினைத்தபோது இதுதான் நினைவுக்கு வந்தது. ஆனாலும், இங்கு எல்லோருக்குமாகப் பேசும் அதிகாரமும் ஆதரவும் வாய்க்கப் பெற்றவர்கள் மற்றவர்களைத்தான் முட்டாள்களாயடித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, தங்களது வாழ்வையும் அரசியலையும் கெட்டித்தனமாகவே நடத்திக் கொள்கிறார்கள்.

எதிரியைப் பழிதீர்க்கும் அடிப்படையிலான உணர்ச்சிகர ஆவேசங்களைத் தங்கள் பேச்சுக்களின் மூலமாகக் கட்டியெழுப்பத் தெரிந்தவர்கள், மற்றவர்களை மிகச் சுலபமாக முட்டாள்களாக்கி விடுகிறார்கள்.

சவால், எச்சரிக்கை, போராட்டம் வெடிக்கும், முழக்கம், தலைவர் ஆவேசம், எதிரி நடுக்கம்... என்று அறுபது வருடங்களுக்கும் மேலாக வார்த்தைகளாலேயே தமிழ்மக்களை வெல்லவைத்துக் கொண்டிருக்கும் இந்த நமது அரசியல் மற்றும் ஊடகச் சூழலை வெளியிலிருந்து அவதானிக்கும் ஒருவர், "இவர்கள் வருடம் முழுவதுமே "ஏப்ரல்–1"ஐக் கொண்டாடிக் கொண்டிருப்பவர்கள்" என்றுதானே வியப்பார்!

ஜெனிவாப் படையெடுப்பு, அமெரிக்கப் படையெடுப்பு, இந்தியப் படையெடுப்பு என்று அவ்வப்போது இலங்கை அரசை மண்கவ்வ வைத்து, அதன்மூலம் தமிழ்மக்களுக்கு அவ்வப்போதைய வெற்றிக்கனிகளைப் பறித்துத்தானே திரும்புகிறார்கள்!

ஆனாலும், தமிழ் மக்கள் வாய்ப்புக் கிடைத்தால் குடும்பத்தோடு கோவிந்தாவாக வெளிநாடு போய் செட்டிலாகிவிட முடியாதா என்ற முயற்சியிலிருப்பதும், குந்த ஒழுங்கான குடிலற்று, வருமானத்தைப் பார்க்க வழியற்று, இத்தனை வருசக் கஷ்டங்களையும் எதற்காகப் பட்டார்களோ அந்த அரசியல் தீர்வும் இல்லாமல்தானே தொடர்கிறது!

இதுதான் தலைவர்கள் வருசா வருசம் படையெடுப்புகளாலும், போராட்ட வெடிப்புகளாலும் பெற்றுத்தரும் வெற்றிகளின் விளைவா?

இன்னும் எத்தனை வருசங்கள் இவர்களுக்கு வெற்றிமீது வெற்றிவந்து சேர்ந்த பின்னர், தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு வந்து சேரும்?

இந்தத் தலைவர்கள் பெற்று வைத்திருக்கும் பெரும்பான்மை எம்.பிப் பதவிகளை மாகாணசபைப் பதவிகளையும் வைத்துக் கொண்டு இன்னும் தீர்வுக்குரிய அசுமாத்தங்களையே இவர்கள் ஆரம்பித்ததாகத் தெரியவில்லை.

தமிழ்ப் பகுதிகளில் பெரும்பான்மையான பிரதேச சபைகள், நகர சபைகளின் ஆட்சிப் பொறுப்பை எடுத்து வைத்திருந்தும் நமது பிரதேசங்கள், நகரங்களில் இவர்களால் எந்த அபிவிருத்தியும் நடந்ததாகத் தகவல் இல்லை.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இதுதான் என இந்தியாவும் அமெரிக்காவும் ஏனைய சர்வதேசமும் சொல்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தின் படியான வடக்கு மாகாண சபையையும் இவர்களே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அதிகாரங்களை வலுப்படுத்தும் விதமாகவோ, வடக்கை மீள் கட்டமைப்புச் செய்யும் விதமாகவோ ஒரு துரும்பையும் இவர்கள் எடுத்துப்-போட்டதாகக் காணோம்.

எல்லாவற்றுக்கும் பதிலாக, "இலங்கை அரசாங்கம் ஒன்றையும் செய்ய மறுக்கிறது" என்பதையே வாய்பாடாகச் சொல்லி வருகிறார்கள்.

இவர்களது பேச்சுக்களையும் எழுப்பங்களையும் கேட்டுக் கொண்டிருக்கும் எம்போன்ற ஒரு முட்டாள் தனத்தை உலகில் வேறெங்கும் காணமுடியுமா? முட்டாள்கள் தினம் கொண்டாட நம்மைவிடத் தகுதியானவர்கள் வேறு யார்?

- ஆசிரியர்

# எந்த அரசாங்கம் சர்வாதிகாரமானது?

## கேள்வி எழுப்புகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

சர்வாதிகார அரசாங்கம் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகிய மூன்று அதிகாரங்களையும் தன்வசம் வைத்திருக்கும் இன்றைய அரசாங்கமா அல்லது முந்தைய அரசாங்கமா? என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் இப்போது அது தெளிவாகியுள்ளதாகவும், நாரஹேனபிட்டிய அபயராமயவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு விமல் வீரவன்ச மேலும் கூறுகையில்,

நாடு அரசியல் ரீதியாக மிகவும் பாதுகாப்பற்ற நிலைமைக்கு தள்ளப்பட்டு வருகிறது.

ஒரு தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, பிரதமரையும் நியமித்து, எதிர்க்கட்சித் தலைவரையும் தெரிவு செய்து கொண்டு மூன்று அதிகாரங்களையும் தம்வசம் வைத்துள்ளமை, இலங்கையின் அரசியல் வரலாற்றில் இதுவே முதல் முறை.

முழு நாடாளுமன்றமும் தேசிய அரசாங்கமாக ஒன்றிணைந்திருப்பது உலக நாடுகளில் இருப்பினும், இலங்கையின் தற்போதைய அரசாங்கத்தை போன்ற அனுபவங்களை உலக நாடுகள் கொண்டிருக்காது.

சிங்கப்பூர் போன்ற தேசிய அரசாங்கம் ஆட்சி செய்யும் நாடுகளில் பெயரளவிலாவது தனியான எதிர்க்கட்சித் தலைவர் பிரதிநிதித்துவம் செய்கிறார்.

இலங்கையின் மூன்று அதிகார கேந்திரங்களையும் ஒரு இடத்திற்கு எடுத்துக்கொண்டுள்ளனர். இதனால், தற்போதைய அரசாங்கம் சர்வாதிகார அரசாங்கமா அல்லது முந்தைய அரசாங்கம் சர்வாதிகார அரசாங்கமா என்ற கேள்வி எழுகிறது.

# தேர்தல் முறையில் மாற்றம் எதுவுமில்லை

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய தேர்தல் முறை குறித்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தை தீர்மானம் எதுவுமின்றி முடிவுற்றுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் தேர்தல் முறை மாற்றம் குறித்த பேச்சுவார்த்தை நேற்றுமுன்தினம் மாலை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தேர்தல் முறை மாற்றம் குறித்து இதன்போது கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்ற போதும் உடனடியாக தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவர முடியாது என தேர்தல்கள் ஆணையாளர், அரசியல் கட்சித் தலைவர்களுக்கு தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் பொதுத் தேர்தலை தற்போதுள்ள தேர்தல் முறையில் நடத்துமாறு அரசியல் கட்சித் தலைவர்கள் சிலர் கோரியுள்ளனர்.

ஆனால் இந்தக் கோரிக்கைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட முக்கிய கட்சித் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அதனால் தேர்தல் முறை மாற்றம் குறித்து தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிக்கப்பட்டதாக ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

# பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைக்கு சட்டவிரோத மதுபான உற்பத்தியே காரணம்

## கிளி.பெண்கள், அமைப்பு பிரதிநிதி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியிலுள்ள கிராமங்களில் இடம்பெறும் குடும்ப வன முறைக்கு சட்டவிரோத மதுபான உற்பத்தியே காரணம் என கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்பின் பிரதிநிதியொருவர், நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

கிராமப்புறங்களில் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன. இதற்கு கிராமங்களில் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படும் சட்டவிரோத கசிப்பே காரணம்.

பின்தங்கிய கிராமங்களில் இதன் உற்பத்தியானது அதிகரித்துள்ளதுடன், நுகர்வோரும் அந்தப் பிரதேசங்களிலேயே இருக்கின்றனர். இதனைக்கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

பெண்கள் தமக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் தமது உள்ளார்ந்த விடயங்களை மனம் திறந்து கூறுவதற்கு பொலிஸ் நிலையங்களில் போதியளவு பெண் பொலிஸார் இல்லை.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்திருநதோம்.

வடக்கிலுள்ள பெண்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கத்தின் தலைமையில் ஒரு குழுவொன்றை அமைத்துத் தருவதாகவும் அந்தக்குழுவுடன கலந்துரையாடி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறும் பிரதமர் கூறியிருந்தாக அவர் தெரிவித்துள்ளார்.

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்க கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார நிலையை கருத்திற்கொண்டு அந்தக் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரிடம் மாவட்ட பெண்கள் அமைப்பு கோரிக்கை முன்வைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 5,646 விதவைகளும், 1,888 கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் உள்ளனர். இவர்கள் தங்கள் குடும்பங்களை தலைமை தாங்கி வழிநடத்தி வாழ்வாதார செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர்.

இவ்வாறான குடும்பங்களில் 80 வீதத்துக்கும் அதிகமான குடும்பங்கள், தமக்கான குடும்ப வருமானமின்றி அன்றாட வாழ்வாதாரத்துக்கு பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலை காணப்படுகின்றது. சிறார்கள் கல்வி வசதி ஏனைய அடிப்படை வசதிகளையும் இவர்களால் பூர்த்தி செய்ய இயலாமல் இருக்கின்றது.

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நிலையை கருத்திற்கொண்டு விசேட உலருணவு நிவாரணத்தை குறிப்பிட்ட காலத்துக்கு வழங்க வேண்டும் என மாவட்ட பெண்கள் அமைப்பு கோரிக்கை முன்வைத்துள்ளது.

# குழாய்க் கிணற்றிலிருந்து குடிநீருக்குப் பதிலாக சேற்றுநீர்

கிளிநொச்சி அனர்த்த முகாமைத்துவப் பிரிவால் கிளிநொச்சி கல்லாறு கிராமத்தில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்றிலிருந்து குடிநீருக்குப் பதிலாக சேற்று நீர் வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர், கல்லாறு கிராமத்தில் வசித்துவரும் சுமார் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினூடாக பிரதேச ரீதியாக குழாய்க்கிணறுகள், பொதுக்கிணறுகள் அமைக்கப்பட்டன.

அவ்வாறு அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகளில் இருந்து குடிநீருக்குப் பதிலாக சேற்று நீர் வருகின்றது. பொதுக்கிணறுகள் உவர்நீர்த்தன்மையுடையவையாகக் காணப்படுகின்றன. இதனால், இங்குள்ள குடும்பங்கள், ஐந்து கிலோ மீற்றர் தூரம் சென்று தமக்கான குடிநீரைப்பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மழை நீர் சேகரிப்புத் திட்டத்தின் கீழ் 123 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நீர்த்தாங்கிகளில் சேமிக்கப்பட்ட நீரை ஒரு மாத காலத்துக்கு மாத்திரம் பாவிக்க முடிகின்றது. இந்தக் கிராம மக்கள் குடிநீரை 200 லீற்றர் 250 ரூபா என்ற ரீதியில் தனியார் ஒருவரிடம் கொள்முதல் செய்து பாவித்து வருகின்றனர்.

# தேசிய கீதம்: அடையாளம், தேசியவாதம், இனவாதம் மற்றும் ஏனைய கதைகள்

■ **தனுஸ்கா எஸ் மெதவத்த கட்டுரையிலிருந்து**

**என்னைப் பொறுத்தமட்டில் நான் ஒரு இலங்கையன். ஒரு சிங்களவன் இல்லை. தேசி யவாதம் வருவது அவனோ அல்லது அவளோ சார்ந்திருக்கும் இனத்திலிருந்துதான் என்று ஒருவர் எண்ணுவாரானால், அத்தகைய நபர் ஒருபோதும் ஒரு தேசியவாதியாக இருக்கமாட்டார் ஆனால் ஒரு இனவாதியாக இருப்பார்.**



ஒரு அரச பல்கலைக்கழகத்தில் ஒரு கல்வி நிலை பதவியை வகிக்கும் அதேவேளை இந்த வகையான ஒரு கட்டுரையை எழுதுவது முற்றிலும் சர்ச்சைக்குரிய ஒரு நகர்வு. இது எரிகிற நெருப்பினை மேலும் தூண்டுவதற்கு ஏராளமான எண்ணெயைக் கூட வார்க்கலாம். சிலர் இதனை ஒரு தேசியவாத கட்டுரை எனவும் கருதலாம். எனவே இந்தத் தலைப்பை ஆய்வு செய்வதற்கு முன்பு சில அடிப்படைகளை விளக்குவது அவசியம் என நான் நினைக்கிறேன்.

ஆம் நான் ஒரு தேசியவாதி. ஆனால் தேசியவாதம் என்றால் என்ன? என்னைப் பொறுத்தமட்டில் நான் ஒரு இலங்கையன். ஒரு. சிங்களவன் இல்லை. தேசியவாதம் வருவது அவனோ அல்லது அவளோ சார்ந்திருக்கும் இனத்திலிருந்துதான் என்று ஒருவர் எண்ணுவாரானால், அத்தகைய நபர் ஒருபோதும் ஒரு தேசியவாதியாக இருக்கமாட்டார் ஆனால் ஒரு இனவாதியாக இருப்பார்.

இலங்கையின் பிரஜைகளாக இருப்பவர்கள் அனைவரும் முறையே அவர்களது அந்தந்த இனத்தை பொருட்படுத்தாது இலங்கையர்கள் என்றுதான் கருதப்படவேண்டும். ஒரு தேசியவாதியாக இருப்பதற்கு ஒருவர் தனது சொந்த நாட்டுக்கு விசுவாசமானவர் என உறுதிபூணும் ஒன்றுபட்ட உணர்வு அவரிடத்தில் வரவேண்டும்.

இந்தக் கட்டுரையை வாசித்த பின்னர் சிலர் என்னைத் துரோகி என அழைக்கலாம். எப்படியானாலும் எனது ஒரே நம்பிக்கை இலங்கையர்கள் அனைவரும் ஒரு நாள் சமாதானமாக வாழ முடியும் என்பதே. நானும் மற்றும் எனது கலப்பான குழுவினரான நண்பர்களும், எதிர்வரும் காலங்களில் எங்கள் பிள்ளைகளை இனிமேலும் அர்த்த மற்ற இன வரிசையில் பிளவுபடாத ஒரு நாட்டில் வளரும்படி செய்வோம்.

தேசிய கீதம் பற்றிய வாத்த்தில் நாட்டின் சனத்தொகை தோராயமாக நான்கு வகையினராகப் பிரிந்துள்ளனர். தேசிய கீதத்தில் ஒரு தமிழ் பதிப்பு இருப்பதையிட்டு சிலர் தீவிரமான கோபத்திலும், வேறு சிலர் தேசிய கீதமானது இறுதியாக தங்களுக்குத் தெரிந்த மொழியில் பாட முடிவதையிட்டு அதிக மகிழ்ச்சி அடைபவர்களாகவும், மற்றும் சிலர் இதன் மூலமாக ஒரு நல்லிணக்க முயற்சி தோன்றியுள்ளது என்று உற்சாகம் அடைவதுடன் நாட்டில் சமரசத்தை தோற்றுவிப்பதற்கு இதன் மூலமாக அரசாங்கம் மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டுபவர்களாகவும் மற்றும் இறுதியாக உள்ள பிரிவினர் கட்டமைப்பு மாற்றங்களைப் பின்பற்றாமல் வெறுமே இப்படியான அடையாள நல்லிணக்கப் பொறிமுறைகளால் பயனேதுமில்லை என்று வாதிடுபவர்களாகவும் உள்ளார்கள்.

முதலாவதாக எனது நாட்டிலுள்ள சனத்தொகையின் ஒரு பிரிவினர் வரலாற்று ரீதியாக துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டதை கருத்தில் கொண்டு இறுதியாக தேசிய கீதத்தை அவர்களது சொந்த தாய்மொழியில்தான் பாடவேண்டும் என்று முடிவு செய்திருப்பதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

எனது சொந்த அனுபவத்தில் ஒரு பாடலில் உள்ள வார்த்தைகளின் அர்த்தத்தை புரிந்துகொண்டு உண்மையான உணர்வுடன் பாடும்போது ஒருவருக்கு ஏற்படும் உணர்ச்சிகளைப் பற்றி நான் நன்கு அறிந்துள்ளேன். மேலும் நான் நம்புவது நல்லிணக்க முயற்சியின் அடையாளங்கள் மிகவும் முக்கியமானவை என்று ஏனெனில் கட்டமைப்பு மாற்றங்களுக்கான படிக்கட்டாக அவை அமையக்கூடும்.

இந்த முழு விவாதத்திலும் என்னை ஆச்சரியப்பட வைக்கும் ஒரு அம்சம் என்னவென்றால், பெரும்பாலான இலங்கையர்கள் முதலாவதாக தேசிய கீதத்தில் பொதிந்துள்ள பிரதானமான கருத்தை மறந்துவிட்டதுதான். இரண்டு சமூகங்களிடையே நடக்கும் மொழிப் போரினால் அதன் மிக முக்கியமான அடையாளத்தின் மதிப்பு குறைக்கப் பட்டு விடுகிறது. அது பாடும் மொழியை கருதாமல் விட்டால், அது இன்னமும் இலங்கை தேசிய கீதமாகவே உள்ளது. வேறு வழியில் அதை ஒரு இனவாதியின் கண்ணோட்டத்தில் பார்க்காமல் தனது இதயத்தில் சமூக நலன்களை கருதாமல் பார்த்தல் வேண்டும்.

தேசியப்பாடல்களை தமிழ் அல்லது வேறு மொழிகளில் பாடுவதில் எனக்கு எதிர்ப்பு எதுவும் கிடையாது. ஆகக்கூட அதன் மெட்டு அதேபோல இருப்பதி-னால், அதன் கருத்தும் அதேபோலவே இருக்கும். அடையாள மதிப்பும் அப்படியே இருக்கும். இரண்டு பதிப்புகளும் இலங்கை தாய்க்கு விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது. அது அவர்களின் இனங்களை கருத்தில் கொள்ளாது இலங்கை குடிமக்கள் அனைவரதும் வீடாக உள்ளது. மற்றும் குழப்பமடைந்துள்ள அனைவருக்கும் அதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன், நீங்கள் உங்கள் நாட்டுக்குத் தான் விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறீர்கள் நாட்டின் அரசாங்கத்துக்கு அல்ல. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் நீங்கள் நாட்டின் அரசாங்கத்தை வெறுக்கலாம் ஆனால் அதேவேளை நாட்டை நேசிக்கிறீர்கள். இது நல்லிணக்கத்தின் ஆரம்பம் என நான் நம்பலாமா? நான் நம்புகிறேன்.

'நீதியை மட்டும் நிலைநாட்டினால் போதாது அதை நடைமுறைப்படுத்தியும் பார்க்கவேண்டும்' என்கிற ஒரு பிரசித்தமான சொற்பதம் உள்ளது. நல்லிணக்க முன்னணியில் செய்வதற்கு இன்னும் அதிகம் உள்ளது. நீதி நிலை நாட்டப்பட்டுவிட்டது என்று வெறுமே காட்டிவிட்டால் ஒரு இனத்துக்கு அதுவும் பிளவுபட்ட ஒரு இனமாக இன்னும் தன்னை மீள் கட்டமைப்பு செய்யும் ஒரு இனத்துக்கு அது போதாது.

நான் நம்புவது, ஊழலற்ற அரசியல் நடைமுறைகளால், இலங்கையால் எந்த வேறுபாட்டையும் சமரசம் செய்து கொள்ள முடியும் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான வரலாற்று அடக்குமுறைகளை ஐக்கியமான கட்டமைப்பினால் அகற்ற முடியும் என்று.

இந்தியா போன்ற வேறு நாடுகளையும் ஆதாரமாக்கி தேசிய கீதம் தொடர்பான பல உண்மைகளை சிலர் குறிப்பிடலாம். இந்தியாவில் பல தேசியப்பாடல்கள் உள்ள அதேவேளை, அங்கு ஒரே ஒரு தேசிய கீதம் மட்டுமே உள்ளது, அது தான் நோபல் பரிசுபெற்ற ரவீந்திரநாத் தாகூர் எழுதிய 'ஜன கன மன' என ஆரம்பிக்கும் பாடல்.

இதில் உள்ள உண்மை என்னவென்றால் இந்திய தேசிய கீதமானது இந்தியாவின் பெரும்பான்மை மொழியாக உள்ள சனத்தொகையில் 41 விகிதமாக உள்ள மக்கள் பேசும் ஹிந்தி மொழியில் பாடப்படுவதில்லை.

**நான் நம்புவது, ஊழலற்ற அரசியல் நடைமுறைகளால், இலங்கையால் எந்த வேறுபாட்டையும் சமரசம் செய்து கொள்ள முடியும் மற்றும் சிறுபான்மையினருக்கு எதிரான வரலாற்று அடக்குமுறைகளை ஐக்கியமான கட்டமைப்பினால் அகற்ற முடியும் என்று.**

இந்திய தேசிய கீதமானது சமஸ்கிருத பெங்காலி மொழியில் உள்ளது, தோராயமாக அந்த் மொழியினை சனத்தொகையில் 8 விகிதமானவர்களே பேசுகிறார்கள். இந்த விடயத்தைப் பற்றி இந்திய கல்வியாளர்களுடன் பேசும்போது, அவர்கள் ஜன கன மனவை தேசிய கீதமாக ஏற்றுக்கொள்வதில் அது எழுதப்பட்ட மொழிக்கு அங்கு இடமில்லை, ஆனால் மிகவும் முக்கியமானது அந்த கீதத்தில் உள்ள அடையாள அம்சம்தான் என்று மீளவும் உறுதிப்படுத்தினார்கள்.

தேசிய கீதம் இரண்டு மொழிகளில் பாடப்படுவதுக்கு பிரசித்தி பெற்ற உதாரணமாகத் திகழும் நாடு கனடா, ஆங்கில மற்றும் பிரெஞ் பதிப்புகளிலான தேசிய கீதத்தை கனடாகொண்டிருக்கிறது. எங்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக அதன் முக்கியமான அசல் பதிப்பான தேசிய கீதம் சிறுபான்மை மொழியான பிரெஞ்சு மொழியில் உள்ளது. தற்பொழுது கனடாவில் உள்ள பிரெஞ் பேசும் மக்களின் சனத் தொகை 22 விகிதமாக உள்ள அதே வேளை ஆங்கிலம் பேசு வோர் சுமார் 58 விகிதமாக உள்ளனர்.

இருந்தாலும் என்றைக்கு நாங்கள் ஊழலற்ற அரசியல் நடைமுறைகளில் அனுபவம் பெற்ற தேசமாகும் அதிர்ஷ்டத்தை பெறுவோம் என்பதில் நான் ஒரு சந்தேக வாதியாகவே உள்ளேன். இப்போதைப் பொறுத்தமட்டில் நான் மேலும் நம்புவது இலங்கையர்கள் என்கிற வகையில் நாங்கள் தேசிய கீதத்தின் மொழியினைப் பற்றி வாத பேதங்களில் ஈடுபடாமல் ஒருமித்து ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும். நாங்கள் தேசிய கீதத்தின் மொழியினைப் பற்றிய சர்ச்சையில் காலத்தை விரயமாக்குவதற்கு மாறாக உண்மையாகவே வேலை செய்வதற்கு முக்கியமான பல விடயங்கள் உள்ளன.

நாடு பல்லின நாடாக உள்ளபோது, இரண்டு உத்தியோகபூர்வ பதிப்புகளைக் கொண்ட தேசிய கீதங்கள் இருப்பதற்கான முன்னுதாரணங்கள் உள்ளன.

எல்லாவற்றிலும் மேலாக இதற்கான சிறந்த தீர்வு தேசிய கீதத்தில் எந்த வார்த்தையையும் கொண்டிராத ஸ்பெயினின் நடைமுறையை பின்பற்றுவது தான். ஸ்பெயின் ஒரு பல்லின மக்கள் வாழும் நாடாக உள்ளதினால் அதன் தேசிய கீதமான 'லா மார்ச்சா றியல்' என்பதில் 1978 முதல் பாடல் வரிகள் எதையும் பயன்படுத்துவதில்லை.

மேலும் பல்மொழி பேசும் சமூகங்கள் உள்ள வேறு நாடுகளிலும் வார்த்தைகளே இல்லாத தேசிய கீதம் உள்ளது. பொஸ்னியா, ஹெர்சே கோவினா, சன் மாரியோ குடியரசு மற்றும் கொசோவா (கொசோவாவை ஒரு நாடாக அங்கீகரிப்பதில் உள்ள பிரச்சினைகளை ஒரு புறம் ஒதுக்கி விடுங்கள்) போன்ற நாடுகளில் முறையே அவர்களின் தேசிய கீதங்களில் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பாடல் வரிகள் கிடையாது.


தேசிய கீதம் ஒரு அடையாள நடைமுறையாக பாடப்படுவதாக எதிர்பார்க்கப்படுகிறது என்கிற உண்மையை கருத்திற்கொண்டு, ஒரு உத்தியோகபூர்வ தேசிய கீதம் மற்றும் அதற்கு பல விழாக்கால பதிப்புகள் உள்ளன அல்லது வார்த்தைகளே இல்லாத ஒரு தேசியகீதம் என்கிற நடவடிக்கையை மேற்கொண்டால் இந்த நோக்கம் நிறைவேறும். இந்தக் கட்டுரை உங்களுக்கு நிம்மதியான ஒரு இரவுத் தூக்கத்தை கொடுக்க உதவினால் எனது நோக்கம் நிறைவேறும்.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுவதாகுக!

# பொருளாதாரத்தில் அணிசேரா கொள்கை

# எந்த நாட்டுடனும் முரண்பட மாட்டோம்

## சீன வானொலிக்கு ஜனாதிபதி பேட்டி



இலங்கை, பொருளாதார வளர்ச்சிப் போக்கில் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றி, உலகில் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைப்புறவை நிலைநிறுத்தும். எந்த நாட்டுக்கும் எதிராக நாம் முரண்பாட்டை ஏற்படுத்தமாட்டோம். - இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால, அங்கு வானொலி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது முதலாவது சீனப் பயணம், மிகவும் வெற்றிகரமாக இருக்கின்றது. இலங்கையின் புதிய ஜனாதிபதியாக, இப்பயணத்தின் மூலம், சீன அரசின் மேலதிக ஆதரவுகளைப் பெறலாம் என நினைக்கின்றேன். மருத்துவ சிகிச்சை, வேளாண்மை முதலிய துறைகளிலான ஒத்துழைப்பு உடன்படிக்கைகளில் சீனாவும் இலங்கையும் கையொப்பமிட்டுள்ளன.

இலங்கை, பொருளாதார வளர்ச்சிப் போக்கில் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றி, உலகில் பல்வேறு நாடுகளுடன் ஒத்துழைப்புறவை நிலைநிறுத்தும்.

எந்த நாட்டுக்கும் எதிராக, முரண்பாட்டை நாம் ஏற்படுத்த மாட்டோம். இலங்கையின் வளர்ச்சிக்கு உலகில் பல்வேறு நாடுகளின் நட்பார்ந்த ஆதரவு தேவைப்படுகின்றது. சர்வதேச நிலைமையில், சீன அரசுடனான ஒத்துழைப்பு இலங்கைக்கு மிகவும் முக்கியமாக இருக்கின்றது என்றார்.

## புலம்பெயர்ந்தோர் தடை நீக்கம் குறித்து முடிவில்லை

### பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



முன்னைய அரசாங்கத்தின் காலத்தில், புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை நீக்குவது தொடர்பாக இறுதி முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

'இது உணர்வுபூர்வமான ஒரு விவகாரம். மிகவும் கவனமாகவே கையாளப்பட வேண்டும். நாடாளுமன்றத்தினதும் ஆதரவு தேவைப்படுகிறது.' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்திருந்தது.

சரியான ஆதாரங்களின்றி, முன்னைய அரசாங்கம் இந்தத் தடையை விதித்துள்ளதாகவும், இதனை புதிய அரசாங்கம் மீளாய்வு செய்யவுள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார்.

இதற்கு ஜனாதிபதியின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்த நிலையில், தற்போது, இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 19 ஆவது சட்டத்திற்கு எதிராக 18 மனுக்கள் நீதிமன்றில் தாக்கல்

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கான திருத்த சட்டமூலம் விசேட சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த திருத்த சட்டமூலத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரை 18 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பிரபல சட்டவுரைஞர் கொமின் தயாசிறி, பிவிதுரு ஹெல உறுமய செயலாளர் உதய கம்மன்பில மற்றும் நுகேகொடையைச் சேர்ந்த எல்.பி.ஜ பெரேரா, தலவத்து கொடையைச் சேர்ந்த தர்ஷன வீரசேகர, வண. பெங்கமுவே நாலக்க தேரர், கோட்டை வீதியைச் சேர்ந்த வணிகசேகர, வண. மாத்தறை ஆனந்த சங்கர தேரர் மற்றும் அத்துருகிரியவைச் சேர்ந்த வீரதுவ ஆகியோரே இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

ஜனாதிபதியின் அதிகாரங்கள், அரசாங்கத்தின் அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள் என்பன திருத்தப்படவுள்ள இந்த 19ஆவது திருத்தத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் சர்வஜன வாக்கெடுப்பின் அங்கீகாரமும் தேவையென மனுதாரர்கள் தங்களுடைய மனுவில் கூறியுள்ளனர்.

மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கான திருத்த சட்டமூலம் விசேட சட்டமூலமாக கடந்த 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தச் சட்டமூலம் தொடர்பான விஷேட வர்த்தமானி மார்ச் 13ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நிதிமோசடி குறித்து பந்துலவிடம் விசாரணை



மகிந்தோதய தொழில் நுட்ப கல்விக்கூட செயற்றிட்டங்களின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடிகள் குறித்து முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவிடம், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு நேற்று முன்தினம் விசாரணை நடாத்தியுள்ளது.

தமக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் துரித விசாரணைகளை நடாத்துமாறு கோரி, முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன, நேற்று முன்தினம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குச் சென்றிருந்தார்.

முன்னாள் கல்வி அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளருக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பிலேயே இதன்போது அவரிடம் விசாரணைகள் நடாத்தப்பட்டன.

## அமைச்சுப்பதவி குறித்து திருப்தி அடையாத திஸ்ஸ

(கொழும்பு)

எனக்குக் கிடைத்த அமைச்சுப் பதவி குறித்து திருப்தி அடைய முடியாது என பௌத்த சாசன அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தேர்தல் காலத்தில் கடுமையாக தாக்கிப் பேசியவர்களுக்கு நல்ல அமைச்சுக்கள் கிடைத்துள்ளன.

நாங்கள் அவ்வாறு தாக்கிப் பேசவில்லை. எனினும் அண்மையில் எமக்குக் கிடைக்கப்பெற்ற பதவிகள் குறித்து திருப்தி அடைய முடியாது.

கடந்த அரசாங்கத்திலும் அமைச்சுப் பதவிகள் கிடைக்கப் பெற்ற போதிலும் அதிருப்தியிலேயே இருந்தோம்.

எம்மை விடவும் பிரதி. அமைச்சர்களுக்கு நல்ல நிலைமை காணப்படுகின்றது.

எனக்கு கிடைத்த அமைச்சுப் பதவி தொடர்பில் மக்களின் கருத்தை அறிந்து வருகின்றேன்.

இன்னமும் நான் ஊருக்குப் போகவில்லை, ஊர் மக்கள் என்ன சொல்கின்றார்கள் என பார்த்து அதன் அடிப்படையில் அமைச்சுப் பதவி குறித்து தீர்மானிப்பேன் என திஸ்ஸ கரலியத்த கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

## நாட்டுக்கு கடமை செய்யும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

நாட்டுக்கான கடமைகளை ஆற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையைப்பார்த்தால், சில கடமைகளை செய்ய வேண்டிய சூழ்நிலைமை உருவாகியுள்ளது.

குறுகிய காலத்தில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் மூலம் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.

என்னையும் எனது குடும்பத்தாரையும் என்னைச் சுற்றி இருப்பவர்களையும் இந்த அரசாங்கம் பழிவாங்கி வருகின்றது.

இந்த நடவடிக்கையினால் அரச அதிகாரிகள் ஊழியர்கள் பல மணித்தியாலங்கள் இரகசிய பொலிஸ் நிலையங்களில் அலைந்து திரிய நேரிட்டுள்ளது.

1931ஆம் ஆண்டு முதல் ராஜபக்ஷாக்கள் அரசியலில ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இவ்வாறான ஓர் நெருக்கடியான நிலைமை எமக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை.



தற்போதைய அரசாங்கம் சேறு பூசல்களிலேயே அதிகளவு கவனம் செலுத்தி வருகின்றது.

எனது பாதுகாப்பு பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளது, இதனால் பாரியளவு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பண்டாரகம விஹாரையில் நடைபெற்ற மத வழிபாட்டு நிகழ்வில் நேற்று முன்தினம் பங்கேற்று அங்கிருந்த மக்களிடம். இந்தக் கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார்.

## துறைமுக நகரத்திட்ட பிரச்சினைக்கு இன்னமும் தீர்வுகாணப்படவில்லை

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

1.4 பில்லியன் டொலர் பெறுமதியான கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் தொடர்பாக சீனாவுடன் உள்ள பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான அனுமதிகள் பெறப்படவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தினால், சீனாவினால் மேற்கொள்ளப்படும் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் சீனாவுக்கு மேற்கொண்ட் பயணத்தை அடுத்து, இந்தத் திட்டத்துக்கு அனுமதி அளிக்கப்படும் என்று சில தகவல்கள் வெளியாகின.

ஆனால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த விவகாரம் குறித்து; சீன அதிபர் ஜி ஜின் பிங்குடன் கலந்துரையாடவில்லை என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா ஏஎவ்பியிடம் தெரிவித்துள்ளார்.

சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாக பெறப்பட்ட அனுமதிகளை சமர்ப்பிக்குமாறு, சீன நிறுவனங்களுக்கு நாம் கால அவகாசம் வழங்கியிருந்தோம்.

ஆனால் அவர்கள் இன்னமும் அவற்றைக் கையளிக்கவில்லை. என்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மன்னார் மடுக்கரை மக்களுக்கு மாற்றுக்காணி வழங்க ஏற்பாடு

வருடாவருடம் சிறுவர்கள், முதியோர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் சகிதம் பாடசாலைகளிலும், பொதுக் கட்டடங்களிலும் தஞ்சமடைந்து இடவசதி பிரச்சினைகளுடனும் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளுடனும் அசௌகரியங்களுடன் வாழும் மடுக்கிராம இடர்நிலைமைகளை கவனத்தில கொண்டு, பிரதேச செயலாளர் மடுக்கரை மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்கி மீளக்குடி யேற்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது என சிவசக்தி ஆனநதன் எம்.பி.தெரிவித்துள்ளார்.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மடுக்கரை கிராமம், ஒவ்வொரு வருடமும் மாரி மழை காலங்களில் மல்வத்து ஓயா நீர் பெருக்கெடுத்து பாய்வதால் வெள்ள நீரில் முற்றாக மூழ்கும் நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.


இந்த வெள்ள அனர்த்தத்தால் இக்கிராம மக்களின் வீடுகள், உடைமைகள், தோட்டங்கள், கால்நடைகள் பெரும் அழிவுகளை சந்திப்பதுடன், இங்கு வசித்து வரும் மக்களும் இடம் பெயர்ந்து நானாட்டான் மோட்டைக்கடை உள்ளிட்ட பாடசாலைகளில் தஞ்சமடைந்து, மழை ஓய்ந்து வெள்ள நீர் வடிந்த பின்னர் வீடுகளுக்குத் திரும்பும் அவலநிலை காணப்படுகின்றது.

எனவே இத்தகைய நடவடிக்கைக்கு மடுக்கரை கிராம மக்களாகிய நீங்கள் உங்களின் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையையும் நலன்களையும் கவனத்தில் கொண்டு ஒத்துழைப்புகளை வழங்குவது நன்மை தரக்கூடியது. எனவே இவ்விடையம் தொடர்பில் சாதகமான முடிவுகளை பரிசீலிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மடுக்கரை கிராமத்தைச்சேர்ந்த 367 மாணவர்களுக்கு வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் நிதியிலிருந்து கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, மடுக்கரை பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போதே ஆனந்தன் எம்.பி.கிராம மக்களிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். (70)

## வெளிநாட்டுப் பறவைகள் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(மன்னார்)



பருவ கால மாற்றம் காரணமாக நாட்டுக்கு வரும் பறவைகளில் ஒரு தொகுதி அண்மையில் தலை மன்னாருக்கு வந் திருந்தன.

அவற்றை காகங்கள் தாக்கியுள்ளன. இதனால் குஞ்சுகளை விட்டு விட்டு பெரிய பறவைகள் தப்பியோடியுள்ளன. இதனால் குஞ்சுகள் தனிக்கவிடப்பட்டுள்ளன.

மேற்படி குஞ்சுகளை காப்பாற்றிய தலைமன்னார் மக்கள் சரணாலயத்தில் ஒப்படைப்பதற்காக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## 'வேலுசுமன்' கடற்படை முகாமுக்கு பாதை குறியீடுகள் புதுப்பிப்பு

மண்டைதீவுப் பகுதியின் கிழக்கே முத்துமாரியம்மன் கோவிலில் இருந்து வேரம் பறையம்காடு, ஓயாமாரி குடுகு கிணறு, செம்பியன் தோட்டம், கரையோரசெம்பாடு (உப்புசெம்பாடு) பகுதிகளை உள்ளடககியதாக உள்ள "வேலுசுமன்" கடற்படைமுகாமுக்கு செல்லும் வழிப்பாதை குறியீடுகள் புதுப்பிக்கப்பட்டும் புதிதாக அமைக்கப்பட்டும் வருகின்றது.

பழைய றேடியோ சிலோன் ரயில் நிலையத்திலிருந்து புதுவாங்கல் பகுதியில் உள்ள படைநிலைக்கும், கண்ணகை அம்மன் ஆலய சூழலில் உள்ள கடற்படைகளில் நிலையத்துக்கும் செல்லும் வழிக்குறியீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. பிரதான முகாமுக்குச் செல்லும் பாதை குறியீடு முத்துமாரியம்மன் பின்புற வீதியில் சிமந்தால் அமைத்து வர்ணம் தீட்டும் வேலை நேற்று செவ்வாய்க் கிழமை முடிவடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே இனிதென்னிலங்கை வாகனங்கள் செல்லுமிடத்தை இலகுவாக அறியமுடியும் என நம்பப்படுகிறது. (23)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



வவுனியாவை தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் ஓகன் நிறுவனத்தால் கிளிநொச்சியில் நடாத்தப்பட்ட 6 மாத கால வீட்டு மின் இணைப்பு பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி சோலைவனம் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

ஓகன் நிறுவனத் தலைவர் வி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.எஸ்.ரி.ஏ.நிறுவன பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

சுவிஸ் நாட்டைச் சேர்ந்த எஸ்ரிஏ நிறுவனத்தின் நன்கொடையில் 12 இலட்சம் ரூபா செலவில் நடாத்தப்பட்ட இந்தப் பயற்சி நெறியில் 16 பேர் பயிறசியை நிறைவு செய்து சான்றிதழைப் பெற்றுக் கொண்டனர். இதில் 5 பேர் மாற்றுத்திறனாளிகளாவார். (90)




# ஐ.சி.சி. முறைகேடுகளை அம்பலப்படுத்துவேன்

## தலைவர் முஸ்தபா கமால் மிரட்டல்






(டாக்கா)

ஐ.சி.சி.யில் நடக்கும் பிரச்சினைகளை அம்பலப்படுத்தவுள்ளதாக அதன் தலைவர் முஸ்தபா கமால் மிரட்டல் விடுத்துள்ளார்.

நடந்து முடிந்த உலகக் கிண்ண போட்டியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணிக்கு ஐ.சி.சி. தலைவர்களுள் ஒருவரான என்.சீனிவாசன் (இந்தியா) உலகக்கிண்ணம் வழங்கியுள்ளார்.

இந்நிலையில் ஐ.சி.சி.தலைவர் முஸ்தபா கமால் இதுதொடர்பாக அளித்த பேட்டியில், உலகக்கிண்ண போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு ஐ.சி.சி. தலைவர் தான் கிண்ணத்தை வழங்க வேண்டும் என்பது அடிப்படை விதியாகும்.

எனவே நான் தான் சாம்பியன் பட்டம் வென்ற அவுஸ்ரேலிய அணிக்கு கிண்ணத்தை வழங்கி இருக்கவேண்டும், ஆனால் எதிர்பாராதவிதமாக கிண்ணத்தை வழங்க எனக்கு அனுமதி அளிக்கப்பட்வில்லை.

எனவே, ஐ.சி.சி.யில் என்ன நடக்கிறது என்பதை வெளி உலகுக்கு அம்பலப்படுத்துவேன். இப்படி கீழ்த்தரமாக நடந்து கொள்பவர்கள் யார் என்பதை வெளிப்படுத்துவேன் என்றும் கிரிக்கெட்டுக்காகவும், ஐ.சி.சி. நலனுக்காகவும் தொடர்ந்து உண்மையை பேசுவேன் மற்றபடி எந்த நாட்டுக்கு எதிராகவும் கருத்து சொல்லவில்லை என கூறியுள்ளார்.

# கிண்ணத்தை வெற்றிகொள்ள தகுதியான அணி அவுஸ்ரேலியா

## ஐ.சி.சி. தலைவர் புகழாரம்



(புதுடில்லி)

உலக கிண்ணப் போட்டியை வெல்வதற்கு அவுஸ்ரேலியா தகுதியான அணியென சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் என்.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபைத் தலைவர் என்.சீனிவாசன் அளித்த ஒரு பேட்டியில், 5 ஆவது முறையாக உலக கோப்பையை வென்ற அவுஸ்ரேலிய அணிக்கு சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் வாழ்த்துகள். இந்தப் போட்டி முழுவதும் தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிபடுத்திய அவுஸ்ரேலியா வெற்றிக்கு தகுதியான அணியாகும். உலக கோப்பை போட்டியை அபாரமான முறையில் வெற்றிகரமாக நடத்தி முடித்த அவுஸ்ரேலிய நியூசிலாந்து கிரிக்கெட் சபைகள் மற்றும் நிரவாகிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# மெய்வல்லுநர் திறனாய்வு

கைதடி மேற்கு சரஸ்வதி முன்பள்ளியின் வருடாந்த மெய்வல்லுநர் திறனாய்வு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் முகாமைத்துவ குழு தலைவி திருமதி பா.ஜிபோனியா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினாகளாக கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக்கழகத் தலைவர் இ.கந்தசாமி, தென்மராட்சி பிரதேச செயலக ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.வினோதன், கைதடி மேற்கு ஜே/293 பிரிவு கிராம சேவை உத்தியோகத்தர் கி.சதீசன், ஓய்வு நிலை அதிபர் ப.செல்லத்துரை ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி முன்பள்ளிகள் இணைப்பாளர் த.சுபத்திராதேவி, கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் து.மகேந்திரம், சரஸ்வதி மாதர கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி சு.வினோதினி, கைதடி குடும்ப நல உத்தியோகத்தர் எஸ்.சுபோதினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (51)

# மியாமி ஓப்பன் ரென்னிஸ் 4 ஆவது சுற்றில் செரீனா



அமெரிக்காவில் நடக்கும் மயாமி ஓபன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 4 ஆவது சுற்றில் விளையாட நட்சத்திர வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (நம்பர் 1, அமெரிக்கா) தகுதி பெற்றார். மூன்றாவது சுற்றில் சக வீராங்கனை கேதரின் பெல்லிசுடன் நேற்றுமுன்தினம் மோதிய செரீனா 6-1, 6-1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்றார். மற்றொரு 3 ஆவது சுற்றில் அனா இவானோவிச் (5 ஆவது நிலை செர்பியா) 6-7 (4-7), 5-7 என்ற நேர் செட்களில் சேபைன் லிசிக்கியிடம் (ஸ்பெயின) போராடித் தோற்றார். முன்னணி வீராங்கனைகள் கஸ்னட்சோவா (ரஷ்யா), சாரா எர்ரானி (இத்தாலி), சிமோனா ஹாலெப் (ரோமானியா), பிளாவியா பென்னட்டா (இத்தாலி) ஆகியோரும் 4 ஆவது சுற்றுக்கு முன்னேறி உள்ளனர்.

மற்றொரு 3 ஆவது சுற்றில் ஸ்டனிஸ்லாஸ் வாவ்ரின்கா (சுவிஸ்) 6-7 (4-7), 6-7 (5-7) என்ற நேர் செட்களில் அட்ரியன் மன்னரினோவிடம் வீழ்ந்தார். ஆண்டி முர்ரே (இங்கிலாந்து), மான் பில்ஸ் (பிரான்ஸ்), தோமஸ் பெர்டிச் (செக்.) ஆகியோர் 4 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

# ஒருநாள் தரவரிசை வெளியீடு வில்லியர்ஸ், ஸ்ரார்க் முதலிடத்தில்




உலகக் கிண்ண போட்டிகள் நிறைவடைந்த நிலையில் ஐ.சி.சி. அணிகளுக்கான மற்றும் வீரர்களுக்கான தர வரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதன்படி துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் தொடர்ந்தும் முதலிடத்திலும் பந்துவீச்சில் உலக கிண்ணப் போட்டியில் 22 விக்கெட்டுக்களை கொய்த அவுஸ்ரேலியாவின் ஸ்ரார்க் முதன் முறையாக முதலிடத்தை யும் பிடித்துள்ளார்.

துடுப்பாட்டத்தில் முதல் பத்து இடம் பிடித்த வீரர்களின் விபரம் வருமாறு,

டிவில்லியர்ஸ், (தென்னாபிரிக்கா), சங்கக்கார (இலங்கை), அம்லா (தென்னா பிரிக்கா), ஹோலி (இந்தியா), டில்ஷான் (இலங்கை), தவான் (இந்தியா), வில்லியம்சன் (நியூஸிலாந்து), டோனி (இந்தியா) மக்ஸ்வெல் (அவுஸ்ரேலியா), பெய்லி (அவுஸ்ரேலியா).

பந்துவீச்சில் முதல் பத்து இடத்தைப் பிடித்த வீரர்கள்

ஸரார்க் (அவுஸ்ரேலியா இம்ரான் தாகிர் (தென்னாபிரிக்க அஜ்மல் (பாகிஸ்தான்), ஸ்ரெய்.. (தென்னா பிரிக்கா), சுனில் நரைன் (மேற்கிந்திய தீவுகள்), போல்ட் (நியூசிலாந்து), ஜோன்சன் (அவுஸ்ரேலியா), அண்டர்சன் (நியூஸிலாந்து), மோர்கல் (தென்னா பிரிக்கா) சகிப் அல்ஹசன் (பங்களாதேஷ்).

முதல் பத்து இடம் பிடித்த அணிகள் வருமாறு

அவுஸ்ரேலியா (122), இந்தியா (116), தென்னாபிரிக்கா (112), நியூஸிலாந்து (108), இலங்கை (107), இங்கிலாந்து (101), பாகிஸ்தான் (95), மேற்கிந்தியத் தீவுகள் (92) பங்களாதேஷ் (76), சிம்பாப்வே. (50)

# சுனில் நரைனின் பந்துவீச்சு சர்ச்சை விரைவில் சுமுக தீர்வு கிட்டும்

## கொல்கத்தா மிரட்டலுக்குப் பணிந்தது பி.சி.சி.

(கொல்கத்தா)

மேற்கிந்திய அணியின் பந்து வீச்சாளர் சுனில் நரைனின் பந்து வீச்சு சர்ச்சை தொடர்பாக விரைவில் சுமுக தீர்வு எட்டப் படுமென இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

மேற்கிந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீரர் சுனில் நரைன் இவர் ஐ.பி.எல். போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வருகிறார்.

கடந்த ஆண்டு நடந்த சாம்பியன்ஸ் லீக் 20 ஓவர் போட்டியின்போது சுனில் நரைன் பந்து வீச்சு குறித்து சர்ச்சை கிளப்பப்பட்டது. இதனால் அவர் இறுதிப் போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டார்.

மேலும் இந்த பந்துவீச்சு குறித்த விவகாரத்தில் மேற்கிந்திய கிரிக்கெட் சபை சமீபத்தில் நடந்த உலகக் கோப்பை போட்டியில் இருந்து அவரை விலக்கியது.

சுனில் நரைன் ஐ.சி.சி.யின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி மையத்தில் தனது பந்து வீச்சு பரிசோதனையை உட்படுத்தி நிரூபித்தார்.

ஆனால் இந்திய கிரிக்கெட் சபை சுனில் நரைன் விவகாரத்தில் இதுவரை எந்தவித பதிலும் தெரிவிக்காமலிருந்தது.

இந்த நிலையில் சுனில் நரைனை அனுமதிக்காவிட்டால் ஐ.பி.எல் போட்டியில் இருந்து விலகப் போவதாக நடப்பு சாம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தரப்பில் தகவல் வெளியாகி இருந்தன.


கொல்கத்தா அணியின் இந்த மிரட்டலால் ஐ.பி.எல். அமைப்பும, கிரிக்கெட் சபையும் அதிர்சசி அடைந்துள்ளன.



இதற்கிடையே சுனில் நரைன் விவகாரத்தில் விரைவில் சுமுக தீர்வு ஏற்படும் என்று கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடரபாக கிரிக்கெட் சபை நிரவாகி கூறும்போது, சுனில் நரைன் ஐ.பி.எல்.இல் பங்கேற்பதில் எந்தவித சிக்கலும் இருக்காது.

இந்தப் பிரச்சினையில் சுமுக தீர்வு ஏற்படும். புதிதாக தேர்ந்து எடுக்கப்பட்ட நிர்வாகிகள் விரைவில் கூடி இந்தப் பிரச்சினை பற்றி முடிவு எடுப்பார்கள் என்றார்.

# புளூட்டோ வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது கோல்ட் ஸ்ரார்



அச்சுவேலி, கதிரிப்பாய் முரசொலி விளையாட்டுக் கழகத்தினால் அமரர் சின்னத்துரை நாகராசா நினைவாக நடாத்தப்பட்ட துடுப்பாட்ட போட்டியில் 'புளூட்டோ' வெற்றிக் கிண்ணத்தை கோல்ட் ஸ்ரார் அணி சுவீகரித்தது.

இத் துடுப்பாட்டப் போட்டியில் பதது அணிகள் மோதிக் கொண்டன. இறுதிப் போட்டிக்கு அச்சுவேலி கோல்ட் ஸ்ரார் மற்றும் ரொக்கெட் ஆகிய இரு அணிகளுமே தெரிவாகின.

இதன் இறுதிப் போட்டி கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி ரொக்கெட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ரொக்கெட் அணித் தலைவர் முதலில் துடுப்பாடத் தீர்மானித்தார். இதற்கமைய அவ் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக சுல்பி 34 அகிலேந்தன் 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 95 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கோல்ட் ஸ்ரார் அணி சிறந்த அடித்தளத்தை இட்டது. எனினும் ரொக்கெட் பந்து வீச்சாளரர்கள் தொடக்க இலக்குகளைச் சரித்தனர். எனினும் பகிஜின் பொறுமையான துடுப்பாட்டம் கோல்ட் ஸ்ரார் அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்ற இரண்டாவது முறையாகவும் கிண்ணத்தை சுவீகரிக்க வைத்தது.

இத்தொடரில் சிறந்த துடுப்பாட்டத்திற்காக கோல்ட் ஸ்ரார் அணியின் கஜன் 3 விருதுகளைப் பெற்றார். சிறந்த பந்து வீச்சாளராக ரொக்கெட் அணித் தலைவர் நேருயன் தெரிவானார்.

இறுதிப் போட்டியின் நாயகனாக கோல்ட் ஸ்ரார் அணியின் பகிரதன் தெரிவானார்.

# விடைபெற்றார் விற்றோரி



நியூசிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளரான டேனியல் விற்றோரி சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் டேனியல் விற்றோரி , கடந்த 1997 ஆம் ஆண்டு இளம் வீரராக தன் கிரிக்கெட் வாழ்க்கையை தொடங்கினார்.

உலகக் கிண்ண அணியில் இடம்பெற்றிருந்த வெட்டோரி, சிறப்பான முறையில் பந்துவீசி, 9 போட்டிகளில் 15 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

இநநிலையில் தான் அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், உலகக் கிண்ணப் போட்டிதான் நியூசிலாந்து அணிக்காக நான் விளையாடிய கடைசிப் போட்டி. என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் அது சிறப்பானதாக முடிந்தது. அந்தப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தால் அது இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

# விளையாட்டில் எல்லாம் சகஜமப்பா ஹோலிக்கு ஆதரவாக ராவிட்

உலகக்கிண்ணத் தொடரில் சரியாக விளையாடாத விராட் ஹோலிக்கு முன்னாள் இந்திய அணித்தலைவர் தனது ராவிட் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தில் ஹோலிக்கு கொஞ்சம் தாக்குப் பிடித்து இருந்தால், இந்திய அணி சிறப்பாக விளையாடி இருக்கும். ஆனால் 1 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றி விட்டாரே என்றும் ரசிகர்கள் புலம்பிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் விளையாட்டு என்று வந்து விட்டால் இதெல்லாம் சாதாரணம் என்று ராவிட், ஹோலிக்கு ஆதரவாகப் பேசியுள்ளார்.

இது பற்றி அவர் கூறுகையில், இந்திய அணி வீரர்கள் தங்களால் முடிந்த வரை சிறப்பாகச் செயற்பட்டனர்.

அரையிறுதி வரை வருவது கடினமானதே. இந்தியா, ஒரு இளம் அணியாக உள்ள நிலையில், அவுஸ்ரேலிய தடையைக் கடக்க முடியாமல் தோற்றதில் பெரிய வியப்பு இல்லை.

அவுஸ்ரேலியாவுக்கு வந்து அந்த அணிக்கு எதிராக விராட் ஹோலிக்கு அளவுக்கு சிறப்பாக டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய ஒரு துடுப்பாட்டக்காரரை என்னால் குறிப்பிட முடியவில்லை.

அந்த அளவுக்கு அவருடைய மிகச்சிறந்த திறமையை நாம் பார்த்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அரையிறுதிப் போட்டியில் அவரால் சிறப்பாக, விளையாட முடியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# உலகக் கிண்ணத்தை வென்று குவிக்கும் ஆஸி.யின் ஆதிக்க இரகசியம் என்ன?



உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அவுஸ்ரேலிய அணி தனது ஆதிக்கத்தை அதிகமாகவே செலுத்தி வருகிறது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர், 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. முதல் 2 உலகக் கிண்ணத் தொடரிலும், மேற்கிந்திய அணியே ஆதிக்கம் செலுத்தியது.

1983 இல், இந்தியா, மேற்கிந்தியத் தீவுகளின் ஆதிக்கத்தை முடித்து வைத்தது. அதன்பிறகு இதுவரை மேற்கிந்திய அணி தனது நிலையைவிட்டு கீழே இறங்கியபடிதான் உள்ளது.

ஆனால், கிரிக்கெட்டில் தற்போது ஆதிக்கம் செலுத்தும் ஜாம்பவான் என்றால் அது அவுஸ்ரேலியாதான்.

அவுஸ்திரேலியா முதன்முதலாக 1987 இல் கிண்ணம் வென்றது. இதன்பிறகு, 1992 உலகக்கிண்ணத்தில் சற்று பதுங்கியிருந்ததை போல காணப்பட்ட அவுஸ்ரேலியா, 1996 இல் இறுதிப் போட்டிக்கு வந்தது.

பின்னர் 1999, 2003, 2007 என ஹட்ரிக் கிண்ணங்களை வாங்கிய அவுஸ்ரேலியாவுக்கு, 2011 இல் இந்தியா பிரேக் போட்டது. ஆனால் இப்போது மீண்டும் அவுஸ்திரேலியா 2015 இல் சம்பியன் ஆகியுள்ளது.

அவுஸ்ரேலியாவின் இந்த ஆதிக்கத்திற்கு அங்கு நிலவும் விளையாட்டு கலாசாரமே முக்கிய காரணம் என்கின்றனர், விளையாட்டு நிபுணர்கள்.

இது பற்றி முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் கூறுகையில் "அவுஸ்ரேலியாவில் இளைஞர்கள் முழுகக, முழுக்க, போட்டி நிறைந்த சூழலில்தான் வளருகிறார்கள்.

எல்லா இடமும் அப்படித்தான். அவர்களது சமூகக் கட்டமைப்பு முழுக்கவே போட்டி நிறைந்ததாகவே உள்ளது.

கிரிக்கெட் மட்டுமல்ல, ரக்பியாக இருந்தாலும், கால்பந்து, நீச்சல், ரென்னிஸ், ஹொக்கி என்று எந்த விளையாட்டாக இருந்தாலும், அவுஸ்ரேலியாவில் போட்டிதான் நிலவுகிறது" என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல் அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர் இயன் சப்பல் கூறுகையில், அவுஸ்ரேலியாவை வீழ்த்த வேண்டுமானால், நீங்கள்தான் முயற்சி செய்யவேண்டுமே தவிர, அவர் கள் தவறு செய்வார்கள் என்று காத் திருக்க முடியாது என்று கூறியுள்ளார்.

அவுஸ்ரேலியா இதுவரை ஆடிய 856 போட்டிகளில் 529 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. அதாவது, தோராயமாக 65 சதவீத போட்டிகளில் வென்றுள்ளது.

இதுபோன்ற காரணங்களால்தான், மொத்தம் 11 உலகக்கிண்ணக் போட்டிகளில், 7 முறை இறுதிப்போட்டியில் வந்து, அதில் 5 முறை கிண்ணம் வென்றுள்ளது.

# மியாமி ஓப்பன் ரென்னிஸ் நடால் வெளியேற்றம்

மியாமி ஓப்பன் ரென்னிஸ் போட்டிகளில் நான்கு முறை இரண்டாமிடம் பிடித்த ரபேல் நடால், மூன்றாவது சுற்று ஆட்டத்தில் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற ஆண்கள் 3 ஆவது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயினின் பெர்னாண்டோ வெர்டாஸ்கோவிடம் 6-4, 2-6, 6-3 என்ற செட் கணக்கில் நடால் அதிர்ச்சிச் தோல்வியடைந்தார்.

ரென்னிஸ் ஒற்றையர் தர வரிசைப் பட்டியலில் 2 ஆவது இடத்தில் உள்ள நடாலை 34 ஆவது இடத்தில் உள்ள வெர்டாஸ்கோ வீழ்த்தினார்.

இது குறித்து வெர்டாஸ்கோ கருத்து வெளியிடுகையில், நடால் போன்ற சிறந்த வீரரை எதிர்த்து விளையாடி வெற்றி பெறுவது ரென்னிசில் மிகப் பெரிய விஷயம் என்றார்.



ரென்னிஸ் வரலாற்றில் மிக உயர்ந்த இடத்தை பிடித்த வீரரை தோற்கடித்தது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருந்தது என வெர்டாஸ்கோ தெரிவித்துள்ளார்.

# ராஜபக்ஷாக்கள் - பண்டாரநாயக்காக்கள் - சிறிசேனாக்கள்

தேசிய அரசாங்கம் முன்மொழிந்த 100 நாட்கள் செயற்றிட்டத்தை குறித்த நாட்களுக்குள் முடிப்பதற்கான சாத்தியப்பாடுகள் இப்போதைக்கு இல்லை. இந்த நிலையில், நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் தேசிய அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளுக்குள்ளேயே மாற்றுக் கருத்துக்கள் எழுந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, நாடாளுமன்றம் வரும் ஏப்ரல் 24ஆம் திகதி கலைக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது. அதனை நோக்கிய நகர்வுகளையும் கச்சிதமான முன்னெடுக்கின்றது.

தேசிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தன்னுடைய பெரும்பான்மையை நிரூபிப்பதற்கான அழுத்தங்களை ஆரம்பத்தில் எதிர்கொண்டாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரானதும் அதற்கான சிக்கல்கள் நீங்கின. ஆனால், நீங்கிய சிக்கல்கள் புதிய வடிவில் எழுந்தன.



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது எனும் விடயத்தை தேர்தல் முறை மாற்றத்தோடு சம்பந்தப்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அழுத்தங்களை வழங்க ஆரம்பித்தது. ஆனாலும், ஓரளவுக்கு அவற்றை தன் சார்பில் கையாண்டு (குறைபாடுள்ள) 19ஆவது திருத்த சட்டமூலத்தினை கடந்த செவ்வாய்க்கிழமை தேசிய அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

100 நாட்கள் செயற்றிட்டத்தில் முக்கிய விடயமாக கொள்ளப்பட்ட 19ஆவது திருத்த சட்டத்தினை நிறைவேற்றியதும், நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன. ஆக, ஏப்ரல் 24ஆம் திகதி இல்லையென்றாலும், அடுத்து வரும் ஒன்றிரண்டு மாதங்களில் நாடாளுமன்றம் கலைக்கப் பட்டு பொதுத் தேர்தலொன்று நடத்தப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் பல தரப்புக்களோடு இணைந்து அமைத்த வியூகத்தினூடாக வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி, பொதுத் தேர்தலை பெரும் ஆர்ப்பரிப்போடு எதிர்கொள்கின்றது. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த தருணத்திலிருந்தே அதற்கான ஆயத்தங்களில் அந்தக் கட்சி ஈடுபடுகின்றது.

கடந்த காலங்களில் அந்தக் கட்சிக்குள் காணப்பட்ட தலைமைத்துவத்துக்கான பிரச்சினைகள் இப்போது இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாஸவும் ஒரே அணியில் கட்சியின் வெற்றி தொடர்பில் சிந்தித்து ஒன்றிணைந்து விட்டார்கள். மகிந்த ராஜபக்ஷவை வீழ்த்தியாகிவிட்டது, இனி மற்றவர்களை இலகுவாக கையாளலாம் என்கிற எண்ணம் அவர்களை இன்னமும் உற்சாகம் கொள்ள வைத்திருக்கின்றது.

பொதுத் தேர்தலின் பின்னரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தேசிய அரசாங்கமொன்று இரண்டு வருடங்களுக்கு பதவியிலிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், அந்த தேசிய அரசாங்கத்துக்குள் ஐக்கிய தேசியக் கட்சி தனிப்பெரும்பான்மையுடன் இருப்பதையே விரும்புகின்றது. அதுதான். அடுத்து வரப்போகும் ஐந்து, ஆறு வருடங்களுக்கான ஆட்சியதிகாரத்தை தீர்மானிக்கும் வல்லமை கொண்டது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெறுவது தொடர்பில் அக்கறை கொண்டு செயற்பட்ட ரணில் விக்ரமசிங்க, பொதுத் தேர்தலில் சிங்கள மக்களிடம் அதிக வாக்குகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் அதிக கரிசனையோடு இருக்கின்றார்.

எந்தவொரு தருணத்திலும் சிங்கள பௌத்த தேசியவாதிகள் ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிருப்தி கொண்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றார். தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் தேசிய அரசாங்கம் முன்னெடுக்கும் விடயங்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கரங்களை கொண்டே செய்விக்கின்றார்.

எந்தவொரு தருணத்திலும் தமிழ் மக்களின் சிறிய பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயமும், பௌத்த தேசியவாதிகளை கோபப்படுத்தி, தேர்தல் வெற்றிகளை கேள்விக்குள்ளாக்கிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கின்றார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அண்மைக்காலங்களில் எழுந்துள்ள பிரச்சினையும் அதன்போக்கிலேயே கையாளப்படுகின்றது. ரணில் விக்ரமசிங்க தன்மீது சேற்றை வாரியிறைத்தவர்களையே தன்னுடைய நலனுக்கான சேர்த்துக் கொள்பவர்.

அதிகாரத்தினை அடையும் வழிமுறைகள் மாத்திரமே அவரின் இலக்கு. ஆனால், தன்னை நோக்கி வடக்கு மாகாண முதலமைச்சர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை சிங்கள பௌத்த தேசியவாதிகளின் மனங்களை வெல்லும் முகமான சதுரங்க ஆட்டத்துக்காக பயன்படுத்துகின்றார். சி.வி.விக்னேஸ்வரனை "மகா பொய்யர்" என்று இந்தியத் தொலைக்காட்சியொன்றிலேயே பகிரங்கமாக குற்றஞ்சாட்டுகின்றார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற பொதுமக்களின் காணி மீளக்கையளிப்பு நிகழ்விலும் சி.வி. விக்னேஸ்வரனை எதிர்கொள்ளவதை தவிர்த்துக் கொண்டு தன்னுடைய கோபம் உண்மையானது போன்ற தோற்றப்பாட்டை ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்தினார்.

அவர்கள் இருவரும் முகத்தை திரும்பிக்கொண்ட விடயம் முள்பள்ளி மாணவர்களின் கோபம் போல இருந்தாலும், ரணில் விக்ரமசிங்கவின் அந்த நடத்தை என்பது மிகவும் கச்சிதமாக கட்டமைக்கப்பட்டிருக்கின்றதோ என்று நாம் நம்ம வேண்டியிருக்கின்றது. எதுவும் அறியாமல், சி.வி.விக்னேஸ்வரன் பலிகடாவாகியிருக்கின்றார்.

ரணில் விக்ரமசிங்க தன்னுடைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பெரும் திட்டமிடல்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் தலைமை வகிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை எப்படிக் கட்டுக்குள் கொண்டு வருவது என்பது தொடர்பில் யோசித்துக் கொண்டிருக்கின்றார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கட்சியை முழுமையாக தன்னுடைய தலைமையின் கீழ் ஒருங்கிணைப்பது தொடர்பில் அவர் இன்னமும் சிக்கல்களை எதிர்கொள்கின்றார். அதைனைவிட இன்னொரு பெரும் சிக்கல் அவரைப் பின்தொடர்கின்றது.

அது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் தேர்தல் அரசியல் களத்துக்குள் பிரவேசிப்பது தொடர்பிலான விடயம். சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தியே தன்னுடைய தேர்தல் அரசியல் பிரவேசம் மீண்டும் அமையும் என்று வெளிப்படையாக மகிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றார். இந்த நிலையில், மகிந்த ராஜபக்ஷவையும், அவர் சார்பானவர்களையும் எப்படி கையாள்வது என்பது தொடர்பிலான சிக்கலும் நீள்கிறது.

மகிந்த ராஜபக்ஷவின் திட்டங்களை முறியடிப்பது தொடர்பில் இன்னொரு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவின் ஒத்துழைப்புடன் மைத்திரிபால சிறிசேன செயற்பட்டாலும், அவர், சந்திரிக்கா குமாரதுங்க தொடர்பிலும் அதிகளவான பயத்தினைக் கொண்டிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் வெற்றியின் பின்னர் அதனை அவர் தனக்கு நெருக்கமானவர்களிடம் வெளிப்படையாகவே வெளியிட்டிருக்கின்றார். "சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷக்களிடமிருந்து மீட்டெடுத்து பண்டாரநாயக்கக்களிடம் வழங்குதல்" என்ற கோசத்தை தேர்தல் காலத்தில் மைத்திரிபால சிறிசேன முன்வைத்தாலும், தேர்தலின் பின்னரான காலத்தில் "சிறிசேன"க்களின் கைகளிலும் சுதந்திரக் கட்சி இருந்தது என்ற வரலாற்றை பதிவு செய்வது தொடர்பில் அவர் விட்டுக்கொடுப்பின்றி செயற்படுகின்றார்.

**- புருஜோத்தமன் தங்கமயில் கட்டுரையிலிருந்து.**

# ஒஸ்கார் விருது சாபம்?

ஒஸ்கார் விருது பற்றி ஒரு சாபம் உள்ளதாக வும் இதனால் பல நடிகர்.. நடிகையர்.. அந்த விருது தனக்குக் கிடைத்துவிடுமோ எனப் பயப்படுவதாகவும் கூறப்படுகிறது. இப்படி பயப்பட அப்படி என்ன சாபம் உள்ளது?

ஒஸ்கார் விருது பெற்று நாடு திரும்பும் நடிகர் / நடிகையரின் மார்க்கெட் சரிந்து காணாமல் போய்விடுகிறார்கள். தனிப்பட்ட வாழ்க்கையிலும் விருது பெற்ற பிறகு பல பிரச்சினைகள் எனக் கூறப்படுகிறது.

இதற்கு இவர்கள் கூறும் காரணம் 1930களில் லூயிஸ் ரெய்னர் பிரபல நடிகை இருமுறை ஒஸ்கார் விருது பெற்றவர். ஆனால். நாடு திரும்பியதும்... கொஞ்சம் கொஞ்சமாக அடுத்த 10 ஆண்டுகளில் காணாமலே போய்விட்டார்! இவருக்கு மட்டும் இத்தகைய நிலை என்றில்லை.

கத்ரின் ஜெட்டா ஜோன்ஸ், குவெய்னித் பால்ட்ரோ, அட்ரின்ப்ரூடி மற்றும் க்யூபா கூடிங் ஜுனியர் ஆகியோரும் இப்படி பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது சாபத்தை நம்புபவர்களின் வாதம்.

ஆக இதுகுறித்து ஓர் ஆய்வு தேவை என மிச்சிகன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மைக்கேல் ஜோன்சன் ஓர் ஆய்வு மேற்கொண்டார்.



இதில் 1023 சினிமா நட்சத்திரங்கள் ஆய்வுக்கு உட்பட்டனர்.

இவருடைய முடிவு என்ன?

ஒஸ்கார் சாபம் என்பது கற்பனை! சில நடிகர்.. நடிகையருக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆனால் பெரும்பாலான சினிமா நட்சத்திரங்கள் ஒஸ்கார் விருது பெற்ற பின்பும் நன்கு ஜொலித்துள்ளனர். முந்தைய படங்களைவிட மேலும் தரம் உயர்ந்த படங்களில் நடித்துள்ளனர். மேலும் பிரபலமாகியுள்ளனர் என்பது இவருடைய முடிவு!

ஒஸ்கார் விருது பெற்றதினால் எழும் பிரச்சினை என்ன?

விருதுக்குப் பின் அவர்கள் ஆஹா ஓஹோ என பேசப்படும்போது அவர்கள் தங்களை ரொம்ப உயர்வாய் எண்ணத் தொடங்கும்போது, அது தங்கள் குடும்ப வாழ்க்கைக்கு வேட்டு வைத்து விடுகிறது. திருமணமாகி ஒரு வருட[illegible] கழிந்திருந்த நிலையில், [illegible] விவாகரத்துகள் நிகழ்ந்து[illegible]ான. இந்த விவாகரத்து வி[illegible]யத்தில் நடிகைகளைவிட, நடிகர்கள் மூன்று பங்கு அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு ஒருவேளை கர்வம் காரணமாக இருக்கலாம்.

ஆய்வு முடிவுகளை பேராசிரியர் மைக்கேல் ஜோன்சன்... கட்டுரையாக எழுதி இதழொன்றில் வெளியிட்டுள்ளார். விருதுக்குப் பரிந்துரைக்கப்படாத ஆண் நடிகர்களைவிட, பரிந்துரைக்கப்பட்ட நடிகர்களின், தனி வாழ்க்கையில் விவாகரத்து அதிகம் என்றும், ஒஸ்கார் விருது பெண் சினிமா நட்சத்திரங்களை அந்த அளவுக்கு தனி வாழ்க்கையில் பாதிக்கவில்லை என்பதும் இவர் முடிவு!

# தமிழ்த்திரைப் பாடல்களில் கவித்துவம்

- ஆர்.அபிலாஷ் -

தமிழில் நவீன கவிதை என்றும் அருகிப் போன மூலிகை போன்ற வஸ்து தான். ஆனால் அதன் வீச்சை இன்று விகடனில் வரும் கவிதைகளில் இருந்து திரைப்படப் பாடல்கள் வரை பார்க்க முடிகிறது. குறிப்பாய் சமகாலப் பாடல் களில் வரும் உவமைகளைச் சொல்லலாம். எழுபது எண்பதுகளில் கவிதையில் உருவகம் பிரதானமாய் இருந்தது. மு.மேத்தாவின் "நெம்புகோல் கவிதை" ஒரு உதாரணம். பிறகு தொண்ணூறுகளில் குறியீடு மற்றும் படிமம். "நடக்கும் இடமெங்கும் பொன்மணல்" எனும் பிரமிள் வரியைச் சொல்லலாம். இப்போது கவிதையின் அச்சாணியாக உவமை இருக்கிறது. நேரடி யான, கதைகூறும் பாணியி லான எளிய கவிதை தான் இன்றைய பாணி. நேரடியான கவி தையில் உக்கிரமான உணர்ச்சியை சொல்வதற்கும், அதை எளிமையாக வைப்பதற்கும் உவமை ஏற்றது.



கார்த்திக் நேத்தா

சமகால திரையிசைப் பாடல்களில் வரும் உவமைகளில் என்னை மிகவும் கவர்ந்த ஒன்று "காத்தோடு தூத்தல் போல போறானே" எனும் அப்பாடலின் துவக்க வரியில் வரும் உவமை. மிக வித்தியாசமான அதே வேளை படத்தின் கதையோடு பொருத்தமான உவமை இது. காற்றடிக்கும் போது தூறல் சேர்த்து போடும் போது ஒரு நூதனமான உணர்வு ஏற்படும். அது காற்றாகவும் இருக்காது, முழுமையான தூறலாகவும் இருக்காது. தூறல் ஆயிரம் ஊசிகளைப் போல முகத்தில் வீசி அறைந்தபடி கடக்கும். அதே வேளை ஈரமேறிய சில்லென்ற காற்று சுகமாகவும் இருக்கும். நம் கண்முன்னே தூறல் மெல்ல மெல்ல கரைந்து காணாமல் போவது பார்க்க துக்கமாகவும் இருக்கும். பிரிவுக்கு இதைவிட அழகான உவமை சொல்ல முடியுமா?

காதலில் பிரிவிலும் கூட ஒரு சுகமான வலி உண்டு. காதலின் இழப்பை எண்ணி எண்ணி மறுகும் போது தன்னை மறந்து அப்பேருணர்ச் சியில் மூழ்கும் கிளர்ச்சி தனியானது. காதல் மனதை விட்டு முழுக்க அகன்ற பிறகு ஒரு வெறுமை தோன்றும். அப்போது தான் இழப் புணர்ச்சி வெறுமைக்கு எவ்வளவு மேலானது எனப் புரியும். அதனால் தான் காதல் காயமாகி முழுக்க ஆறா- மல், காந்தும் போது, மனம் வலியில் எரியும் போது காதல் துணையின் வாசனை, உடல் வெம்மை, எண்ணங் கள் அகலாமல் நம் அருகில் வெகு அருகிலேயே இருக்கும். முகத்தில் அறைந்து, துன்புறுத்தி, கண்முன்னே பிரிந்து போனாலும், தற்காலிகமான ஒரு ஆறுதல் தரும் காற்றோடு அடித்துக் கொண்டு போகும் தூறலாக இங்கு பிரிவு சித்திரப்படுத்தப்படுகிறது.

இப்பாடலில் வரும் வேறு சில உவமைகளைப் பார்ப்போம்.

"மழையில் நனஞ்ச காத்தப் போல,
மனச நீயும் நனச்சுபுட்ட"

காற்று அதன் இயல்பில் ஈரமற்றது. அது மழையில் ஈரமேறி கனக்கிறது. பிறகு வெயிலடிக்க ஈரத்தை இழக்கிறது. மண்ணைப் போல் ஈரத்தை தனக்குள் ஆழத்தில் பதுக்கி வைக்க காற்றால் முடியாது. காற்று பயணித்துக் கொண்டே இருக்க வேண்டும். எதையும் சொந்தம் கொண்டாட முடியாது.

"டீ தூளு வாசம்
கொண்ட மோசக்காரா"

இது மிக வித்தியாசமான ஒரு உவமை. இதுவரை தேயிலை வாசனையை பிடித்தவரின் வாசத் தோடு ஒப்பிட்டு யாரும் எழுதி நான் படித்ததில்லை. பாடலாசிரியரின் ஒரு தனிப்பட்ட ரசனை சார்ந்த அவதானிப்பாக இதைப் பார்க்கலாம். இவ்வுவமை எனக்கு பிடிக்க காரணம் டீ தூளின் மனதை கிளர்த்தும் வாசம். அடுத்த முறை அடுக்களைக்கு போனால் டீ டப்பாவை திறந்து முகர்ந்து பாருங்கள். சட்டென மனதை தூக்கி விசிறி அடிக்கும் அந்த வாசனை. ஒரு காதலனின் வாசனை யும் இதைத் தானே செய்யும்!

"மூக்கணாங் கயிறப்போல
உன்னெனப்பு"
அடகாக்கும் கோழி போல என்
தவிப்பு"

இரண்டாவது உடமையான அடைகாக்கும் கோழியுடன் ஒப்பிடுகை யில் முதல் உவமை மூக்கணாங் கயிறு சற்று எதிர்மறையானது. மாட்டின் மூக்குத்துவாரத்தை அறுத்தபடி அதைப் பிணைக்கும் கயிறு வலியுடன், ஒடுக்குமுறையுடன் சம்பந்தப்பட்டது. ஆனால் காதலும் ஒரு விதத்தில் மூக்கணாங்கயிறு தானே. நம் நினைவுகளை மெல்ல மெல்ல அறுத்து அந்த வலியுடனே நம்மை பிணைக்கக் கூடியது. பிரிந்த காதலின் எண்ணங்கள் நினைக்க நினைக்க வலியை பெருக்கும். ஆனால் அதனால் அதை நினைக்காமல் இருக்க மாட்டோம். கட்டப்பட்ட கயிறை இழுத்துக் கொண்டே இருக்கும் மாட்டைப் போல் மனம் தன்னை மீண்டும் மீண்டும் வலிக்குள் ஆழ்த்திக் கொண்டிருக்கும். வலி நிரம்பிய நினைவுகளை மீண்டும் மீண்டும் எழுப்பி அதில் ருசி காணும். காதல் தோல்வி அல்லது பிரிவை அறிந்தவர் எவருக்கும் இந்த அனுபவம் இருக்கும். யோசித்துப் பார்த்தால் எவ்வளவு உக்கிரமான, அனுபவ ஆழம் கொண்ட உவமையாக இருக்கிறது இது!

"வாகை சூடவா" படத்தில் உள்ள இப்பாடலை எழுதியவர் கார்த்திக் நேத்தா. இவர் நவீன கவிதைகள் எழுதுபவர், நவீன இலக்கியம் அறிந்தவர். குறிப்பாக இவருக்கு ஹைக்கூவில் ஈடுபாடு அதிகம். இளைய தலைமுறை பாடலாசிரியர் களில் மிக தனித்துவமும் திறமையும் கொண்டவர் நேத்தா. "தவளைக்கல் சிறுமி" இவரது கவிதைத் தொகுப்பு.

# உணவுத் தெரிவும் ஆரோக்கிய வாழ்வும்

ஷாலினி புவனேசமூர்த்தி
நீரிழிவு சிகிச்சை நிலையம்
யாழ். போதனா வைத்தியசாலை



ஆரோக்கியமாக வாழ அனைவருக்கும் ஆசை நாம் அனைவரும் ஆரோக்கியமாக இருக்கின்றோமா? என்று கேட்டால் 100இற்கு 90 வீதம் இல்லை என்பதே பதில். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். ஆரோக்கியமாக வாழ எமக்கு உணவு பழக்கங்கள் மிகவும் அவசியமாகின்றன.

ஏதாவது உடல்நிலை பாதிப்பு என்று வைத்தியரிடம் போனால் மருந்துடன் நல்ல சத்தான சாப்பாட்டைச் சாப்பிட வேண்டும் என்று தான் சொல்வார்கள். சரி சத்தான உணவு என்றால் என்ன? இரத்தம், எலும்பு, தசைகள், தோல், நரம்புகளுடன் பின்னிப் பிணைந்த இதயம், கல்லீரல், நுரையீரல், உடல், சிறுநீரகம் போன்றவற்றைக் கொண்டது தான் எமது உடல், இந்த உடலுக்கு இரத்த ஓட்டம் கிடைத்தால்தன் உடல் உறுப்புக்கள் முழுமையாக இயங்கும் நோய்கள் ஏற்படாது.

எங்கள் உடலுக்கு சத்துக் கிடைக்கவில்லை என்பதை முதலில் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். எப்படிக் கண்டுபிடிப்பது என்று யோசிக்கிறீர்களா? சத்தான உணவு எமது உடலுக்கு கிடைக்கவில்லை என்பதற்கான அறிகுறிகள் இதோ.

எப்பொழுதும் சோர்வு
பலவீனம், வீட்டில் சாதாரண வேலைகள் கூட செய்யமுடியாத நிலை
உடல் எடை அதிகரிப்பு அல்லது குறைவு
நித்திரைக்குறைபாடு
எப்பொழுதும் மன அழுத்தம்
கவனக் குறைவு
உணவு சமிபாடு ஆகாமல் இருப்பது.
மலச்சிக்கல் ஏற்படுவது
அடிக்கடி எரிச்சல்படுவது
தோல்பகுதி வறண்டு இருப்பது.
சொறிசிரங்கு ஏற்படல்
வாய், உதடு வரண்டு போவது
நகங்கள் திடமாக இல்லாமல் உடைந்து போவது.
தலைமுடி கொட்டுவது அதிகரிப்பது
உடலில் நீர் வற்றியது போன்ற உணர்வு
ஞாபகசக்திக் குறைபாடு

இவ்வளவு அறிகுறிகள் சில இருந்தாலே உடலுக்குச் சத்தான உணவு கிடைக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். சத்துக்கள் கிடைக்காத நிலையில் அடுத்து நோய்கள் அணிவகுத்து வரும் என்பதை உணரவேண்டும்.

உண்வைத் தெரிந்தெடுத்து நாம் உண்ண வேண்டும். வாழ்வின் வளர்ச்சிப் படிமுறைக்கேற்ப உணவைத் தெரிவது மிகவும் அவசியம். பசி எடுத்தவுடன் கடையிலோ, வீட்டிலோ பசியைப் போக்குவதற்குகாக ருசியான சாப்பாட்டைத்தான் நாம் தேடுகின்றோம் அல்லவா? எமது உடலுக்கு எவை தேவை என்பதை சிந்திப்பது கிடை யாது. வெறுமனே கலோரிப் பெறுமா னம் கொண்ட உணவுகளையே அதிகம் உண்கின்றோம் புரதம் விற்றமின் கனியுப்பு நிறைந்த உணவுகளையும் எமது நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்ள மறந்து விடுகின்றோம்.

வீட்டில் குழந்தைகள், வயோதிபர்கள் வளரும் பிள்ளைகள், வாலிபர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் இருக்கலாம். அவரவர் உடல் தேவைய்யை மனதில் இருத்தியே நாம் உணவைத் தயாரிக்கவேண்டும்.

மூட்டை தூக்கும் தொழிலாளிக்கு சக்தி கூடுதலாக தேவை. அலுவலக வேலை செய்பவருக்கு அந்தளவு சக்தி தேவையில்லை. உணவைத் தெரியும்போது அவரவர் செய்யும் வேலையையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

காலையிலே வெறும் வயிற்றோடு அநேக குழந் தைகள் பாடசாலைக்கும், பெரியவர்கள் வேலைக் கும் போகின்றார்கள், இது தான் நாம் எமக்கே கொடுக்கும் மிகப்பெரிய தண்டனை. பல நோய்க ளுக்கு வித்திடுவது இதுதான். காலையில் ஒரு கப் பாலாவது குடித்துவிட்டுத்தான் வெளியே செல்லவேண்டும்

குழந்தைகளுக்கு வெளியே சாப்பிடக் காசு கொடுக்காமல் பொரி அரிசிமா, முட்டை மா, என்பவற்றைச் செய்து வையுங்கள். அவை இலகுவில் தயாரித்து உண்ணக்கூடியவை. சுண்டல், பயறு, கௌப்பி, என்பவற்றை முறையாகத் தயாரித்துக் கொடுங்கள்.

பிள்ளைகள் சாப்பிடமாட்டன் என்று அடம்பிடிக் கிறார்களா? ஒவ்வொரு நாளும் விதம்விதமாக உணவைத் தயாரியுங்கள். பிட்டு சமைக்கின்றீர்களா? அதில் கொஞ்சம் கீரையைச் சேர்த்து அவியுங்கள், ரொட்டி செய்கின்றீர்களா? கரட், கோவா, பீற்றூட் போன்றவற்றை துருவலாக வெட்டி மாவுடன் சேருங்கள், தோசையின் மீதும் தூவிக்கொள்ளுங்கள். எண்ணையில் பொரித்த உணவுகளை விட ஆவியில் அவித்த உணவுகளை அதிகமாக சாப்பிடுங்கள்.

முழுத் தானியங்கள், முளைகட்டிய தானியங்கள் (பயறு போன்றவற்றை முதல் நாள் நீருக்குள் ஊறவைத்து அடுத்த நாள் முளை கட்டியவுடன்) அதை உபயோகியுங்கள். ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு பழம் சாப்பிடுவதைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். இட்லியை வாரம் இரு முறையாவது உண்ணுங்கள். இது ஆவியில் வெந்த ஒரு சத்தான உணவு.

மிகவும் முக்கியமான விடயம் என்னவென்றால் மருத்துவரின் பரிந்துரையின்படியே மருந்துகளை உட்கொள்ளவேண்டும். சத்துக்களை பெறுவதற்காக எமது எண்ணப்படி மருந்துகளை உட்கொள்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும். நாம் உட்கொள்ளும் உணவுக்கேற்ப உடற்பயிற்சி செய்வது மிகவும் அவசியமானது.

உடலில் எவ்வளவு கூடிய கவனமெடுக்க வேண் டுமோ அதே அளவிற்கு மனத்திற்கும் முக்கியத்து வம் கொடுக்க வேண்டும். ஆரோக்கியமாவது உடல் மனம் இரண்டையுமே சார்ந்தது. மன அழுத்தத்தைத் தவிருங்கள். நல்ல இசையைக் கேளுங்கள். முதலில் சத்தம் போட்டுக் கதைக்காதீர்கள். மனம் விட்டு கதையுங்கள். தியானம் செய்யுங்கள், பிழை செய்தால் யாராயிருந்தாலும் மன்னிப்புக் கேளுங்கள். உதவி செய்தால் நன்றி சொல்லுங்கள், அழுகைவந்தால் அழுங்கள், சிரிப்பு வந்தால் சிரியுங்கள், மன அழுத்தம் மறைந்து விடும். மன அழுத்தம் மறைந்தால் உடல் புத்துயிர் பெற்றது போல் உணர்வீர்கள்

(நன்றி: Jaffna Diabetic Centre)





கைதடி வடக்கு நவபுரம் நவசக்தி சனசமூக நிலையத்தின் மகளிர் தினவிழா அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், விருந்தினர் ஒருவர் போட்டியில் வெற்றி பெற்ற மகளிர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், விளையாட்டு நிகழ்வில் கலந்து கொள்ளும் மகளிர்களையும் காணலாம். (51,90)

# இளைஞர் கழக செயற்பாடுகளுக்கு நிதி வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## பிரதமரிடம் சம்மேளனத் தலைவர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியில் 25 மாவட்டத்தில் யாழ்மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் 13 ஆவது இடத்தில் உள்ளதுடன் கலாசார போட்டியில் அகில இலங்கை ரீதியில் 2 ஆம் இடத்தைப்பெற்றுள்ளது.

எனவே சம்மேளனத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு நிதி வழங்க பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ்.இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் எஸ். விஜிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட இளைஞர். கழக சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாடு யாழ்.இளைஞர் சேவைகள் மன்றத்தின் கேட்போர் கூடத்தில் தலைவர் எஸ். விஜிதரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சம்மேளனத் தலைவர் தொடர்ந்து உரையாற்றியதாவது,

கடந்த காலங்களில் எமது சம்மேளனம் விளையாட்டிலும் கலாசார நிகழ்விலும் சிறப்பாக செயற்பட்டு பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளது.

அகில இலங்கை ரீதியில் 25 மாவட்டத்தில் 13 இடத்தைப் பெற்று முன்னிலையில் காணப்படுகின்றது. கலாசாரப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் 2 ஆம் இடத்தை வகிக்கின்றது.

அரசின் நூறு நாள் திட்டத்தில் இளைஞர்களுக்கான செயற்றிட்டங்கள் துரிதப்படுத்தப்படவுள்ளதாகவும் எஸ்.விஜிதரன் தெரிவித்துள்ளார்.

எமது சம்மேளனத்தில் நிறைய பிரச்சினைகளும், தேவைகளும் காணப்படுகின்றன.

எமக்கு நிரந்தரமான காணியோ, கட்டடமோ கிடையாது, எமது இளைஞர்களை சிறந்த தலைமைத்துவத்தில் வழிநடாத்துவதற்குரிய நிதியை அரசு வழங்கவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாணசபை உறுப்பினர்களின் சிறிய நிதியைக் கொண்டுதான் எமது செயற்பாடுகளை நிறைவேற்றிவருகிறோம்.

இந்தியப் பிரதமதர் நரேந்திர மோடியும், கட்டார் நாட்டு மன்னரும் எமது நாட்டிற்கு வருகை தந்து இளைஞர் விவகாரங்களுக்கான ஒப்பந்தங்களை நிறைவேற்றியுள்ளார்கள்.

எனவே இவ்வருடம் எமது சம்மேளனத்தின் செயற்பாடுகளுக்குரிய நிதியை புதிய அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கலாசார நிகழ்ச்சியும், விளையாட்டுப் போட்டியும் நடைபெறவில்லையெனவும் இதற்காக பெறப்பட்ட நிதி ஒதுக்கீடு சம்பந்தமான தகவல்கள் கிடைக்கப்பெறவில்லையெனவும் கூறப்பட்டன. நிதி சம்பந்தமான விசாரணைகள நடைபெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி நடைபெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (105)

# டெங்கு பரவக்கூடிய பகுதிகளாக 4,405 இடங்கள் அடையாளம்

டெங்கு தடுப்பு வாரம் அனுஷ்டிக்கப்படுகின்ற இவ்வேளையில் டெங்கு பரவக்கூடிய அபாயகரமான இடங்களாக 4,405 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது சுகாதார அமைச்சின் வழிகாட்டலில் பொது சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சின் அலுவலர்கள் எனப்பலரும் இணைந்து நுளம்பு விரைவில் பரவக்கூடிய இடங்களை இனங்கண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 26, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட பரிசோதனைகளில் வீடுகள், கல்வி வலயங்கள், பொது மற்றும் தனியார் துறைகள், வர்த்தக நிலையங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இனங்காணப்பட்ட 54,929 பிரதேசங்களில் 4,405 பிரதேசங்கள் மிகவும் அபாயகரமான இடங்களாக இனங்காணப்பட்டுள்ளன. அத்துடன் இடம்பெற்ற மூன்று நாள் நிகழ்வில் நாடு முழுவதுமுள்ள 235,550 இடங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. மார்ச் 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந் நுளம்பு தடுப்பு வாரம் இன்றுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்திடமுள்ள காணிகளை மீட்டுத்தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவின் கேப்பாப் புலவு உட்பட மாவட்டத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள காணிகளையும் வீடுகளையும் விடுவித்து மக்களை மீள்குடியேற்றம செய்யுமாறும் மக்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மக்களைச் சந்தித்த பிரதமரிடமே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கேப்பாப்புலவு கிராமம், புதுக்குடியிருப்பின மக்களின் காணிகள் அதே போன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவித்து மக்களை மீள்குடியேற்றம் செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (160)

# வருடாந்த மஹோற்சவம்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் திண்ணபுரம் சிவன்கோவில் வருடாந்த பங்குனி மஹோற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இன்று புதன்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், நாளை வியாழக்கிழமை காலை 8 மணியளவில் வசந்த மண்டபபூசை ஆரம்பமாகி மு.ப. 10 மணியளவில் சோமஸகந்த பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளி பஞ்சரதபவனி இடம்பெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவம் 4 ஆம் திகதி சனிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும். ஆலயத்தில் திருவிழா நாட்களில் மகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறுவதுடன் ஆலயத்துக்குச் சென்றுவர யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.(50)

## முரசின் இன்றைய பலன்

(01.04.2015 புதன்கிழமை)

ஜய வருஷம் பங்குனி மாதம் 18 ஆம் திகதி.
பிரதேஷ விரதம். துவாதசி - திதி. சித்தாமிர்த யோகம்.
மக நட்சத்திரம் பிற்பகல் 04.26 வரை. பின் பூரம்.
இராகு காலம் 12.11 - 01.41 வரை. சுபநேரம் 04.41 - 06.11 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — சட்டராகுவின் கோசர நிலையினால் நோய் நீங்கும் அறிகுறி தென்படல்.

**ரிஷபம்** — அரசுப்பதவி கிட்டும் யோகம் அரசியல் பிரமுகரால் ஏற்பட்டுவிடல்.

**மிதுனம்** — பொறுமை சகிப்புத்தன்மையினால் ஏற்படவிருந்த கைகலப்பு அகன்றுவிடல்.

**கடகம்** — நீர்வழிமூலம் வெளியூர் பிரயாணம் செல்வதை இல்லக்கிழத்தி விரும்பாமை.

**சிம்மம்** — வழுக்கல் மற்றும் சறுக்கலினால் தேகநலம் பாதிப்படைதல்.

**மீனம்** — பெற்றோரின் வற்புறுத்தலினால் விவாகத்திற்கு இசைதல்.

**கன்னி** — எரிபொருள் தீர்ந்ததனால் வாகனத்தை நீண்டதூரம் உருட்டிச் செல்லல்.

**கும்பம்** — மருத்தீடு போடப்பட்டதென நினைத்து அச்சமடைதல்.

**மகரம்** — இலாபச்சனி உள்ளதினால் விற்பனைக்கு விளம்பரஞ்செய்தல்.

**தனுசு** — அண்டப்புழுகு ஆகாயப்புழுகினால் காரிய ஜெயமடைதல்.

**விருச்சிகம்** — இன்று தேடிவரும் அதிர்ஷ்டத்தைப் பற்றிப்பிடித்தல்.

**துலாம்** — பிதாவின் புத்திமதியை வேதவாக்காகக் கொண்டதினால் துயர் அகன்றுவிடல்.

# விலைமதிக்க முடியாத சொத்துக்களே முதியோர்

## வலி.மேற்கு தவிசாளர் தெரிவிப்பு





முதியோர் விலைமதிக்க முடியாத சொத்துக்கள் என சங்கானை காளிகோவில் பகுதியில் நடைபெற்ற முதியோர் தின நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன தெரிவித்தார்.

இந நிகழ்வில் விருந்தினர்களாக வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், வடமாகாண சபை உறுப்பினர் ப.சுகிர்தன், சங்கானைப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர்,சமூகசேவைகள் உத்தியோகஸ்தர் கிராம சேவை உத்தியோகஸ்தர்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகஸ்தர் மற்றும் பல்வேறு அமைபபுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின் தலைவர் கோபாலகிருஸ்ணன் தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் உரையாற்றுகையில் முதியோா எமது சொத்துக்கள் அனுபவம் மற்றும் அறிவில் கூடிய எமது முதியோரிடம் இருந்து நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய நிறைய விடயங்கள் உள்ளன. எமது பண்பாட்டின் பல அம்சங்கள் இன்று எம் மத்தியில் இருந்து அழிவடைந்து செல்லும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

இந் நிலை எமது தேசியத்தின் தன்மையிலும் நீண்ட காலத்தில் மாற்றங்களை உருவாக்கி விடக் கூடியது. இவ்வாறான அர்த்தம் மிக்க பண்பாடுகளை எமது முன்னோர்களிடம் இருந்தே நாம் பெறமுடியும். இவ் விலை மதிப்பிட முடியாத சொததின் புத்தகங்களாக உள்ள முதியோர்கள் எமது சமுதாயத்தின் விலை மதிக்கமுடியாத சொத்துக்களாகவே உள்ளனர். மிக நீண்ட கொடிய யுத்த சூழ நிலைகளின் போது இளைய தலைமுறை இங்கு வாழ முடியாத சூழ்நிலையில் இந் நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் எமது தேசத்தின் சொத்துக்களையும் எமது இருப்புக்களையும் பாதுகாத்த பெருமை இன்றும் நிலை நிறுத்தி புலம் பெயர் நாடுகளில் இருந்து பணத்தினைப் பெற்று என்றும் எமது சமுதாயத்தின் இருப்பைக்காத்த பெருமை இம் முதியோர்களையே சாரும். இம் முதியோர் எவ்வளவு துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்த போதும் அவற்றில் துவண்டு விடாது யாவற்றையும் பாதுகாத்து இன்று எமது இருப்பின் நிலைக்கு அத்திபாரமாக திகழ்ந்தவர்கள் இவர்களது ஒவ்வோர் செயற்பாடுகளுக்கும் இளையவாகள் என்றும் கரம் கொடுக்கவேண்டும்.

முதியோரைப் போற்றவேண்டும் இவர்களது ஒவ்வோர் செயற்பாடுகளுக்கும் ஊக்கமும் ஆக்கமும் வழங்க வேண்டும். கிராம ரீதியாக இம முதியவர்கள் போற்றப்பட வேண்டும் எனக்குறிப்பிட்டார். இந் நிகழ்வில் முதியோர்கள் கௌரவிக்கப்பட்டனர். (25)

# புகையிரத திணைக்களத்தின் அதிபர் தரம் III இற்கு விண்ணப்பம்

இலங்கை புகையிரத திணைகளத்தின் புகையிரத நிலைய அதிபர் III ஆம் தரத்திற்கு வெளி விண்ணப்பதாரிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான எழுத்து மூலப் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 2015.03.27 ஆம் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 30 வயதிற்குக் கூடாதவராகவும் இருத்தல் வேண்டும். க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் உட்டன் கணிதம் மற்றும் வேறு பாடங்கள் இரண்டில் திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.


உயரம் 5அடி 4 அங்குலத்திற்குக் குறையாமலும், நெஞ்சளவு வெளிச்சுவாசத்தின்போது 32 அங்குலத்திற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

மொழித்தேர்ச்சி, நுண்ணறிவு ஆகிய விடயங்களில் பரீட்சை நடைபெறும் விண்ணப்பங்கள் 2015.04.27 ஆம் திகதிக்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளா நாயகம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், திட்டமிடல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை த.பெ.இல.1503 கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் பரீட்சைக் கட்டணம் 750 ரூபாவாகும். (10)



தெல்லிப்பளை இரத்த வங்கியினரின் ஆதரவுடன் லியோக் கழகத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இரத்ததான நிகழ்வின் போது... (48)

# ஆயுர் வேதம்



## பழங்களுக்கு இத்தனை குணங்களா?

அஷ்டாங்கஸங்கிரம் என்னும் ஆயுர்வேதநூல் பழ வர்க்கம் எனும் பகுதியில் பழங்களில் உலர் திராட்சைப் பழம் மிகவும் சிறந்தது என்று குறிப்பிடுகிறது. இந்த உலர் திராட்சையிலும் நல்ல கருநிறமுள்ள உலர் திராட்சைதான் குணத்தில் சிறந்தது என்றும் வெளிர் திராட்சை உணவாக பயன்படுத்துவதில் சிறந்தது என்றும் குறிப்பிடுகிறது.

இப்படி பழங்கள் அனைத்திலும் சிறந்த கரும் உலர் திராட்சை ஆண்மையை வளர்பபது, கண்பார்வையைக் கூர்மையாக்குவது, மலம் மற்றும் சிறுநீரை நன்றாக வெளியேற்றக்கூடியது. எண்ணெய்ப்பசை உள்ளது. குளிர்ச்சியான வீரியமுடையது.

இனிப்பான சுவையுடைய இந்தப் பழம் வயிற்றினுடைய சீரண இறுதியிலும் இனிப்பாகவே இருக்கக்கூடியது. வயிற்றிலுள்ள வாயு மற்றும் பித்தத்தைச் சீராக்கக் கூடியது. இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். வாயில் ஏற்படும் கசப்பு, மதுபானம் உட்கொள்வதால் ஏற்படும் அதிக வெறி, நாவ றட்சி, வறட்டு இருமல், காய்ச்சல், மூச்சிரைப்பு, உடல் களைப்பு, தொண் டைக் கம்மல், உடல் இளைப்பு போன்றவற்றைக் குணப்படுத்தும்.

இதற்கு அடுத்ததாக மாதுளம்பழம் உயர்ந்தது எனக் கூறப்படுகிறது. மாதுளம்பழம் இனியதாக இருந்தால் பித்த மேலீட்டைக் குறைகும். புளிப்பாக இருந்தாலும் அது பித்தத்திற்கு எதிரிடையாகாது. சிறிது சூடான வீரியமுள்ளது. வாத கபங்களைப் போக்குவது.

எல்லாவகையான மாதுளைகளும், உடலுக்கும் உள்ளத்துக்கும் இதமானவை. லேசானவை. எண்ணெய்ப் பசையுள்ளவை. மலக்கட்டை ஏற்படுத்துபவை. ருசியைத் தருபவை. பசியை நன்றாகத் தூண்டிவிடும்.

வாழை, பேரீச்சை, பலா, ஈச்சை, பனை, சிற்றிலந்தை, இலந்தை, மரவள்ளி, மலைவாழை போன்ற கனிகள் உடலைப் பருக்கச் செய்பவை. எளிதில் செரிக்காதவை. குளிர்ச்சியான வீரியமுடையவை. குடலுக்கு எண்ணெய்ப் பசையை அளிப்பவை.

இவை உடல் எரிச்சல், நாவறட்சி, இருமலால் ஏற்படும் இரத்தக் கசிவு போன்ற உபாதைகளை நீக்கக் கூடியவை. கபம், விந்து இவற்றை வளர்க்கும். நாக்கினுடைய சுவையிலும், சீரண இறுதியிலும் இனிப்பான சுவை உடையவை.

மிக முக்கியமாக வாழைப்பழம் இனிப்பானது. மிதமான குளிர்ச்சியுள்ளது. இரத்த பித்தங்களை நீக்குவது. ஆண்மையை வளர்ப்பது. ருசியானது. கபத்தை வளர்ப்பது. எளிதில் செரிக்காதது.

பனம்பழம் பித்தத்தை வளர்க்கும். மலத்தை அகற்றும். இலந்தைப்பழம் மலத்தை இளகச் செய்வது.

வில்வமபழம், புளி நாரத்தைப் பழம், நாவறபழம் போன்றவை கபத்தையும், பித்தத்தையும் குறைக்கக்கூடியவை. துவர்ப்பும் இனிப்புமானவை. பசையற்றவை. குளிர்ந்தவை. எளிதில் செரிக்காதவை. உடல் உட்புற அழுக்குகளைச் சுரண்டி எடுக்கக்கூடியவை. வயிற்றுப் பொருமலை ஏற்படுத்தும். மலக்கட்டுகுடல் வாயுவை சீரமடையச் செய்யும்.

மாம்பழம் இனிப்பானது, புளிப்பானது, எண்ணெய்ப்பசையுள்ளது. குடல்வாதத்தைப் போக்கும். பித்தத்தை வளர்க்காதது. உள்ளத்திற்கு இதமானது. கபம், மாமிசம், விந்து, உடல்பலம் இவற்றை அளிப்பது.

மாம்பழ ரசம் இதயத்திற்கு இதமானது. நறுமணம் உள்ளது. பசையுள்ளது. சுவையை உண்டாக்குவது. பசியைத் தூண்டுவது. பித்தம் வாதம் இவற்றை நீக்குவது. விந்து, இரத்தம் இவற்றைத் தூய்மையாக்குவது.

புளியம்பழம் மலக்கட்டை ஏற்படுத்தும். உடல் மழமழப்பை நீக்கும். சூடான வீரியமுள்ளது. வாத கபங்களைப் போக்கும்.

எலுமிச்சம்பழம் சிறிது பித்தத்தை வளர்க்கும்.

உலர்ந்த இலந்தைப்பழம் பசியைத் தூண்டும். மலத்தை இளக்கி வெளியேற்றும். லேசானது. நாவறட்சி, அயர்வு, உடல்வாட்டம் இவற்றைப் போக்கும். கபவாதங்களில் இதமானது.

அப்பிள் இதயத்திற்கு நன்மையளிக்கக்கூடியது. உடல் எடையை குறைக்கவும், உடலில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கவும் மட்டுமின்றி, நீரிழிவு நோயைக் குணப்படுத்தவும் பெரிதும் உதவுகிறது.

கொய்யாப்பழம் நீரிழிவு நோயைக் குறைக்கவல்லது. தினமும் ஒரு கொய்யாப்பழத்தைச் சாப்பிட்டுவந்தால் இரத்தத்திலுள்ள சீனி குறைய வாய்ப்புள்ளது. எலும்புகளுக்கு வலுவளிக்கக்கூடியது. மலச்சிக்கல், சொறி, சிரங்கு போன்றவற்றைக் குணப்படுத்தும் குணமுள்ளது. உடல் உஷ்ணம், உயர் இரத்த அழுத்தம், கொழுப்பு முதலியவற்றைக் குறைக்கும்.

சீதாப்பழம் முகப்பருக்களை குணப்படுத்தும், நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும். எலும்பு மற்றும் பற்கள் பலமடையும், நினைவாற்றலை அதிகரிக்கவல்லது.

இவை அனைத்தும் ஆயுர்வேதநூல்களில் குறிப்பிட்டுள்ள இன்றளவும் நமக்கு எளிதில் கிடைக்கக்கூடிய பழங்களாகும். இவை மட்டுமின்றி இன்னபிற பழங்களின் குணங்களையும் கண்டறிந்து உட்கொண்டு வந்தால் உடலை வலிமையுடன் பாதுகாப்பதோடு மட்டுமின்றி நோயிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

# 6,792 இலங்கையர்கள் ஓராண்டில் அரசியல் புகலிடம்

UNHCR
The UN Refugee Agency

(கொழும்பு)

ஓராண்டு காலப்பகுதியில் 6,792 பேர் வெளிநாடுகளில் அரசியல் புகலிடம் கோரியுள்ளதாக ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

2014ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் இதுவரையில் வெளிநாடுகளில் பல்வேறு காரணங்களுக்காக அரசியல் புகலிடம் கோரியவர்களின் மொத்த எண்ணிக்கை 6,792பேர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2013ஆம் ஆண்டை விடவும் இந்த எண்ணிக்கை 12 வீதமாக உயர்ந்துள்ளது.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நேபாளத்திற்குச் சென்று அங்கு காத்மண்டுவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தில் புகலிடம் கோரியுள்ளனர்.

போர்க் குற்றச்செயல்கள் தொடர்பில் சாட்சியமளிக்க முன்வந்த 60 சிங்கள மற்றும் தமிழர்களும் இதில் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சஜினுக்கு பிணை

(கொழும்பு)



நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தனவிற்கு நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது.

சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டு தொடர்பில் 9 (1) பிரிவின் கீழ் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை அடுத்து சஜின்வாஸ் நேற்று நீதிமன்றில் ஆஜரானார்.

அதன்போது கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றம் சஜின்வாஸிற்கு பிணை வழங்கியது.

சஜின்வாஸ் குணவர்த்தன தனது சொத்துக் குறித்த தகவல்களை வழங்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெரும்பான்மை பலமில்லாத சம்பந்தன் எதிர்க்கட்சித்தலைவராக வருவதா?

## ஏற்கமுடியாது என்கிறார் தினேஷ்



நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறுவதற்கான பெரும்பான்மைப் பலம் எங்களிடமே இருக்கின்றது. எனவே பெரும்பான்மை பலமில்லாத ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகர் அறிவிக்க முடியாது என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் விவகாரம் குறித்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துள்ள நிலையில், எதிர்க்கட்சித் தலைவராக உள்ள நிமால சிறிபால டி.சில்வா அந்தப் பதவியை வகிக்க முடியாது என்று கூறப்பட்டு வருகின்றது.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவை நியமிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற கேள்வி தற்போது மிகப்பெரிய விவகாரமாக எழுந்துள்ளது.

இந்நிலையில் என்னை எதிர்க்கட்சித் தலைவராக்கும்படி சிலர் கோரிக்கை விடுக்கின்றனர். என்னை எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகர் அறிவித்தால் அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் அந்த வகிபாகத்தை வகிக்கவும் நான் தயாராக இருக்கின்றேன்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை எதிர்க்கட்சித் தலைவராக அறிவிக்க முடியாது. காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசிய நிறைவேற்று சபையில் அங்கம் வகிக்கின்றது. எனவே கூட்டமைப்பின் தலைவர் எதி[illegible] கட்சித் தலைவராக [illegible]

மேலும் சிறில[illegible] கட்சி தேசிய அர[illegible] கெடுத்திருந்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்[illegible]யின் ஏனைய பங்காளிக் கட்சிகள் [illegible] இணைந்து கொள்ளவில்லை.

எனவே எமக்கே நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பெறுவதற்கான பெரும்பான்மை பலம் உள்ளது.

எனவே எதிர்வரும் ஏழாம் திகதி சபாநாயகர் வெளியிடும் அறிவிப்புக்காக நாங்கள் காத்திருக்கின்றோம். பெரும்பான்மை பலமில்லாத ஒருவரை எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகர் அறிவிக்க முடியாது என்றார்.

# அரசுமீது விமர்சனங்கள் இருந்தாலும் மக்களுக்கு அனுகூலங்களும் கிடைத்துள்ளன

## என்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் தொடர்பாக மக்கள் மத்தியில் பரவலான விமர்சனங்கள் இருந்த போதும், அரசாங்கத்திடமிருந்து பொது மக்கள் வெற்றிகொண்ட சில விடயங்களும் உள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் அரசியல் குழு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தி நேற்று முன்தினம் இங்கிரியவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தின் மீது பல விமர்சனங்கள் உள்ளன. அதில் ஒரு பங்கு எங்களுக்கும் உள்ளது.

தேசிய நிறைவேற்று சபையில் நாங்கள் பங்குகொண்டதன் காரணமாக அதுபற்றியும் சிலர் விமர்சிக்கிறார்கள்.



அந்த சபையில் இணைந்து கொண்டதன் ஊடாக கள்ளர்களைப் பிடித்துவிட்டீர்களா, வழக்கு விசாரணைகள் நடக்குமா, உறுதியளித்த விடயங்கள் இடம்பெறுமா, தற்போது எந்த முன்னேற்றமும் இல்லையே என பலர் எங்களிடம் கேள்வி எழுப்புகிறார்கள்.

அதேவேளை. ஐக்கிய தேசியக் கட்சியின் மோசடியான சில உறுப்பினர்கள் தற்போது அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த அரசாங்கத்திடமிருந்து பொதுமக்கள் பெற்றுக்கொண்ட சில நன்மைகளும் உள்ளன.

முன்னர் தமது சுய கருத்துக்களை வெளியிட முடியாத நிலை இருந்தது, விருப்பமான அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாத அச்ச நிலை காணப்பட்டது.

சொந்தமான ஆக்கங்களை வெளியிட முடியாத நிலை இருந்தது.ஆனால் தற்போது அந்த நிலைமை மாறிவிட்டது.என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தொழிலாளர்களின் பேரணி ஐ.தே.க.விற்கு எதிராகவே

## லங்கா சமசமாஜக்கட்சி அறிவிப்பு



எதிர்வரும் தொழிலாளர் தினத்தை ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான மக்கள் இயக்கத்தின் பேரணியாக முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சார்ந்த லங்கா சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

மே தினம் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேற்று முன்தினம் நாராஹேன்பிட்டியில் இடம்பெற்ற சந்திப்பின் போதே முன்னாள் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ. விதாரண இந்தக் கருத்தை வெளியிட்டார்.

குறித்த சந்திப்பில் முன்னாள் அமைச்சர்களான தினேஷ் குணவர்தன, பந்துல குணவர்தன, உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சியே அரசாங்கத்தில் முழுமையான பங்களிப்பைச் செலுத்துவதாக திஸ்ஸ விதாரண குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் தொழில்புரியும் மக்கள் தரப்பில் இருந்து செயற்படவில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# விசேட மருத்துவ நிபுணர்கள் மருத்துவசங்கத்திலிருந்து விலகினர்

(கொழும்பு)

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திலிருந்து, விசேட மருத்துவ நிபுணர்கள் விலகியுள்ளனர.

தாம் உள்ளிட்ட நாட்டில் உள்ள அனைத்து விசேட மருத்துவ நிபுணர்களும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்திலிருந்து விலகி நிபுணத்துவ மருத்துவர்களின் சங்கத்துடன் இணைந்து செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தேசிய மருத்துவமனையின் விசேட நிபுணத்துவ மருத்துவர்கள் சங்கம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அந்தச்சங்கத்தின் தலைவர் ஆர்.பி.தயாசேன குறிப்பிடுகையில், அரச மருத்துவ சங்கம், உறுப்பினர்களின் அனுமதிக்கு புறம்பாக கடந்த காலங்களில் அரசியல் செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செலுத்தியதாக குற்றம்சுமத்தியுள்ளார்.

# ஜனாதிபதி அலுவலகத்தில் காணாமற்போன வாகனங்கள்

## தகவல் தரகோரிக்கை

ஜனாதிபதி அலுவலக வாகனங்களை மீள கையளிக்காமை காணாமற் போகச் செய்தமை தொடர்பில் 2015-01-14 இல் ஜனாதிபதி அலுவலக போக்குவரத்து அதிகாரி குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து காணாமற் போயுள்ள 18 வாகனங்கள் குறித்த தகவல்க்ள் வெளியாகியுள்ளன.

இந்த வாகனங்களை யார் பயன்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கும் நோக்கில் அவற்றின் இலக்கம், வர்க்கம் உள்ளிட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

வாகனங்கள் குறித்த தகவல் அறிந்தால் 0112320141 அல்லது 145 என்ற இலக்கத்திற்கு அழைத்து அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

| இல. | வாகன இலக்கம் | வாகன வர்க்கம் | பதிவு வருடம் |
|---|---|---|---|
| 01 | 14 - 8419 | MITSUBISHI | 1987 |
| 02 | 9 - 5352 | PEUGEOT | 1979 |
| 03 | 11 - 6918 | FIAT | 1980 |
| 04 | 12 - 2054 | RENAULT | 1981 |
| 05 | 16 - 7332 | MITSUBISHI | 1989 |
| 06 | 84 -9426 | YAMAHA | 1981 |
| 07 | 84 - 9742 | YAMAHA | 1981 |
| 08 | 7 - 0895 | PEUGEOT | 1976 |
| 09 | 109 - 5614 | YAMAHA | 1989 |
| 10 | 112 - 7981 | HONDA | 1990 |
| 11 | 142 - 3407 | SUZUKI | 1995 |
| 12 | 15 - 0761 | PEUGEOT | 1987 |
| 13 | 96 - 8620 | YAMAHA | 1987 |
| 14 | 96 - 8621 | YAMAHA | 1987 |
| 15 | MX - 9562 | BAJAJ | 2006 |
| 16 | KC - 2279 | LAND ROVER | 2006 |
| 17 | KC - 2284 | LAND ROVER | 2006 |
| 18 | LD - 1119 | TATA | 2007 |

# கலைஞர்களுக்கு காணிகள் வழங்கல்

நாட்டிலுள்ள கலைஞர்களுக்கு காணித் துண்டுகளை வழங்கவுள்ளதாக சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடைவள பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இதன் முதற்கட்டமாக பனாகொடை இம்புல்கொட பகுதியில் அமைந்துள்ள காணியொன்று அடையாளம காணப்பட்டுள்ளது.

கொடகம மற்றும் பனாகொடை ஊடாக இந்தப் பகுதிக்குச் செல்ல முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இடத்திலிருந்து கொழும்பிற்கு பயணம் செய்ய ஒரு மணித்தியாலம் தேவைப்படும் காணித் துண்டுகள் தேவைப்படும் கலைஞர்கள் தங்களது விபரங்கள் அடங்கிய விண்ணப்பம் ஒன்றை சமூக சேவைகள் மற்றும் கால்நடைவள அமைச்சுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென பிரதி அமைச்சர் கோரியுள்ளார்.

**(13).பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

48.காட்டப்பட்டுள்ள இலக்கஅட்டைகள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக

| | |
|---|---|
| 6 | 0 |
| 9 | 3 |

.................................................

49.50,000 - [ ] 49999 அடைப்பினுள் வரவேண்டிய எண்ணை எழுதுங்கள்

50.416 புத்தகங்களை நான்கு சமமான பொதிகளாக அடுக்கினால் ஒரு பொதியில் அடுக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

.................................................

51.ஒரு கிலோகிராம் அரிசியின் விலை ரூபா 110ஆகும். 2kg 200g அரிசியின் விலை என்ன?

.................................................

52.3kg 800g இல் இருந்து 400g ஐக் கழித்து 900g ஐக் கூட்டினால் பெறப்படும் விடை யாது?

.................................................

53.பெட்டியொன்றில் 345 சவர்க்காரக் கட்டிகளை அடுக்கலாம். அவ்வாறான 6 பெட்டிகளில் எத்தனை சவர்க்காரக் கட்டிகளை அடுக்கலாம்?

.................................................

54.8m நீளமான நாடாவிலிருந்து 30cm நீளம் கொண்ட 6 துண்டுகள் வெட்டப்பட்டன. நாடாவின் எஞ்சியுள்ள பகுதியின் நீளம் என்ன?


.................................................

55.(1).சிற்றுண்டிச்சாலை ஒன்றிற்கு குறித்த தொகைப்பாண்கள் வழங்கப்பட்டன. அங்கு ஒவ்வொரு பாணும் மும் மூன்று துண்டுகளாக வெட்டப்பட்டு 66 பேருக்கு வழங்கப்பட்டன. எனின் அப்பாண்கள் ஒவ்வொன்றையும் இருதுண்டுகளாக வெட்டினால் எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்?

.................................................

(2).எத்தனை முழுப்பாண்கள் வெட்டப்பட்டன? .................................

56.




1.இவ்வுருவின் சுற்றளவு என்ன? .................................

2.பரப்பளவு என்ன? .................................

**நேற்று பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்**

(01).1. 2　2. 4　3. 1　(03). 9.தியவன்ன ஓயா　10.சிவனொளிபாதமலை

11.திருகோணமலை　12.365 நாட்கள்　13.ரைட்சகோதரர்கள்　14.நாய்　15.2

16.2　17.ஆனந்தசமரக்கோன்　(04).18.05.25　19.4　20.1 / 2　21.4m 75cm

22.196 தீக்குச்சிகள்　23.5நாட்கள்　24.25　25.4தட்டைகள்

(05).26 - 31 விரும்பிய வசனம்　(06).32.2　33.2　34.1

35.2　36.2　37.1　38.2　39.2　40.2　41.3

42.1　43.3　44.2　45.2　46.1　47.1　48.3

49.3　50.3　51.2　52.2　53.2　54.1　55.2

56.3　57.1　58.2　59.2　60.3

**பயிற்சி வினாக்களின் விடைகள் நாளைமறுதினம் வெளியாகும்**



**தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015**　பகுதி - I　1 மணி 30 நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

**(01).சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01.கதிரை இரண்டில் அருகருகே இருவர் அமர்ந்துள்ளனர். அதில் ஒருவர் மற்றவரின் மாமி, மற்றவர் அவரின் மருமகன் அல்ல. அவ்வாறாயின் மற்றவருக்கும் அவருக்கும் உள்ள உறவு
(1).மருமகன்　(2).மகள்　(3).மருமகள்

02.ஒருநாள் ஆரம்பமாகும் நேரம் எது?
(1).மு.ப.6.00　(2).பகல் 12.00　(3).நள்ளிரவு 12.00

**(02).பின்வரும் விவரணத்தை வாசித்து விடை எழுதுங்கள்.**

சிலந்தியை விடாமுயற்சிக்கு அடையாளம் என்று சொல்லுவார்கள். அதனை எட்டுக்கால் பூச்சி என்றும் அழைப்பர். சிலந்திக்கு எட்டுக்கால்கள் உண்டு ஆனால் நாம் கண்களை உருட்டி அசைத்துப் பார்ப்பது போல அதனால் கண்களை அசைக்க முடியாது. கண்களை உருட்ட முடியாது என்பதால் அதனால் பலதிசைகளிலும் பார்க்க முடியாது. என்று நினைக்கின்றீர்கள் அல்லவா? அதுதான் இல்லை மற்றைய உயிரினங்களுக்குக்கெல்லாம் இரண்டு கண்கள் இதற்கு மட்டும் ஆறு கூடுதலான கண்கள் உண்டு. எட்டுக்கண்களும் எண் திசையிலும் உள்ளன. எனவே எத்திசையிலும் அதனால் நன்றாகப் பார்க்க முடியும். "இயற்கையின் விந்தையான படைப்புக்களில் சிலந்தியின் கண் அமைப்பும் ஒன்று" என்று கூறினால் ஆச்சரியமாக இருக்கின்றதா?

03.விடாமுயற்சிக்கு அடையாளமாக எதனைக் குறிப்பிடுவர்? .................................

04.சிலந்திக்கு எத்தனை கண்கள் உண்டு? .................................

05.சிலந்தியின் உறைவிடத்தை எவ்வாறு அழைப்பர்? .................................

06."விந்தை" என்பதன் ஒத்தபதத்தை எழுதுக? .................................

07.மேலே தரப்பட்ட பந்தியில் உள்ள சினைப்பெயர்கள் இரண்டு எழுதுக?
1. ....................　2. ....................

08.தன்மைப் பன்மைப்பெயர்ச்சொல்லை எழுதுக? .................................

09."இயற்கை : என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக? .................................

**(03).கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமாக நிரப்பி எழுதுங்கள்**

10.கைப்பு ..........ப் பார்ப்பதற்குக் க..........டி வே..........டுமா?

11.வ..........ப்போக்கன் காட்டுவ..........யாக கால்க..........க்க நடந்தான்.

**(04).பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான குறியீடுகளை இடுங்கள்.**

12.கடற்கரையில் சிறிய கற்கள் ஊரிகள் சிப்பிகள் ஆகியவற்றைச் சேகரித்தேன்

13.தாயகத்தின் தலைவனே வருக வருக என்று மக்கள் வரவேற்றனர்

**(05).இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து எழுதுங்கள்**

14.அப்பா .................................. வெட்டித்தந்தார் (இளனி, இளனீர், இளநீர்)

15. .................................. உறை அழகாய் இருந்தது (தலகணி, தலையணை, தலையணி)

**(06).பின்வரும் வாக்கியங்களை தொடர்வாக்கியமாக மாற்றி எழுதுங்கள்**

16.ஆசிரியர்கள் பாடசாலைக்குப் போனார்கள்.

17.மாணவர்கள் பாடசாலைக்குப் போனார்கள்

.................................................

**(07).பின்வரும் வாக்கியங்களில் வந்துள்ள மரபுத்தொடருக்கான கருத்தை எழுதுக?**

18.எனது வீடுகட்டுவதற்கு நண்பர்கள் தோள்கொடுத்தனர்
.......................................................................................

19.கஷ்டப்பட்ட அரியின் குடும்பம் இப்பொழுது தலைநிமிர்ந்துள்ளது
.......................................................................................

**(08).பின்வரும் சொற்களை பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் எழுதுங்கள்.**

20.இரை : பெயர் .......................................................................

வினை .......................................................................

21.சிறுவயதில் நல்லபழக்கங்களைப் பின்பற்றாது பெரியவயதில் பின்பற்ற இயலாது என்னும் கருத்தைத் தரும் பழமொழியை எழுதுக.
.......................................................................................

**(09).பின்வரும் ஆங்கிலச் சொற்றொடரை தமிழ்மொழியில் எழுதுக**

22.I have big eyes .......................................................................

23.I can Fly in the air .......................................................................

**(10).பின்வரும் தமிழ்ச்சொற்களுக்கான கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக**

24.நூல் நிலையம் .......................................................................

25.கணனி .......................................................................

**(11).இதன் கருத்தை தமிழில் எழுதுக.**

26.பொ(த்)த தென்ன .......................................................................

27.சப சனී (ப்) க கொஹொமத? .......................................................................

**(12).பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுங்கள்**

28.சூரியநமஸ்காரம் செய்வதற்குப் பொருத்தமான நேரம்
(1).முற்பகல் 11.00 (2).காலை 7.00மணி (3).மதியம் 12.00 (4).மாலை 3.00மணி

29.உணவு உண்ணும் முறைக்கேற்ப வேறுபட்டுக் காணப்படும் பிராணி
(1).புலி (2).சிங்கம் (3).பூனை (4).பாம்பு

30.பின்வருவனவற்றுள் உடல் ஓட்டுள்குள் புகுந்து பாதுகாப்புத் தேடாத பிராணி
(1).ஆமை (2).பாம்பு (3).கடலாமை (4).நத்தை

31.இலங்கை அமைந்திருப்பது இந்தியாவிற்கு
(1).வடக்கே (2).தெற்கே (3).மேற்கே (4).கிழக்கே

32.இலங்கையின் தரைத்தோற்றத்தின் நடுப்பகுதி
(1).மலைத்தொடர் (2).ஆறுகள் (3).சமவெளிகள் (4).சதுப்பு நிலங்கள்

33.களனிகங்கை கடலுடன் கலக்கும் இடம்
(1).திருகோணமலை (2).கொழும்பு (3).அம்பாறை (4).நீர் கொழும்பு

34.ஊதுவர்த்தி புகையினால் காணக்கூடிய காற்றின் தன்மை
(1).காற்றின்வலு (2).காற்றின் பயன்பாடு (3).காற்றின் திசை (4).காற்றின் வேகம்

35.அணில் தனது கூட்டை அமைக்க பயன்படுத்தும் பொருள்
(1).தும்பு (2).பஞ்சு (3).சருகு (4).குச்சிகள்

36.அயடீன் உப்பு அடைக்க வேண்டிய பாத்திரத்தின் இயல்பு
(1).வெள்ளைக் கண்ணாடிப்போத்தல்
(2).பிளாஸ்டிக் போத்தல்
(3).சில்வர்டப்பா
(4).கபிலநிற கண்ணாடிப்போத்தல்



37.கையடக்கத் தொலைபேசியில் குறுஞ்செய்திகளைக் குறிக்கும் எழுத்துக்கூட்டம்
(1).AAI (2).SMS
(3).CCA (4).STS

38.D எழுத்து வரும் நாடு எதுவாகும்?
(1).இந்தியா
(2).பாகிஸ்தான்
(3).மலேசியா

39.இங்கு தரப்பட்டுள்ள ஆறுகளில் நீளம் குறைந்த ஆறு எது?
(1).மகாவலிகங்கை
(2).களனிகங்கை
(3).மாதுருஓயா

40.எல்லே விளையாட்டில் உள்ள குழுவிலுள்ள ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை
(1).11 (2).12
(3).16 (4).6

41.

அருகில் உள்ள நட்சத்திரம் எதனைக் குறிக்கின்றது....
(1).விருட்சிகம் (2).மேடம்
(3).இடபம் (4).தனு

42.இவ்வீதி சமிஞ்சை குறிப்பது.....

(1).இடதுபக்கம் திரும்பத்தடை
(2).திரும்பத்தடை
(3).இடதுபக்கமாக திரும்பு

43.தரமான தேயிலையினை எவ்வாறு இனங்காணலாம்
(1).கடும் கபில நிறமாகும்
(2).நீரில் இட்டதும் இளமஞ்சள் நிறமாகும்
(3).நீரில் இட்டால் சிவப்பு நிறம் தோன்றும்
(4).கடும்கபிலநிறம் தோன்றி பின் படிப்படியாக நீரில் பரவிச் செல்லும்

44.உள்ளங்கைகள் இரண்டையும் தொடர்ந்து உராயும் போது ஏற்படும் மாற்றம்
(1).கைகள் இரண்டும் குளிராகும்
(2).உள்ளங்கை சிவப்பாகும்
(3).கைகள் சூட்டை உணரும்
(4).உள்ளங்கை புண்ணாகும்

45.இடிமுழக்கம் கேட்கும்போது செய்யக்கூடிய விடயம்
(1).வானொலிச்செய்திகளைக் கேட்பது
(2).காதுகளை இறுகமூடிக்கொள்ளல்
(3).பிரதான ஆழியை நிறத்துதல்
(4).மரத்தளபாடங்களின் மேல் ஏறுதல்

46.கவ்வாத்து செய்யும் பயிர் பின்வருவனவற்றுள் எது
(1).பலா
(2).தேயிலை
(3).மிளகு
(4).தேக்கு

47.குளையைப் பயன்படுத்துவோர்
(1).மரவேலை செய்வோர்
(2).இரும்பு வேலை செய்வோர்
(3).கட்டட வேலை செய்வோர்
(4).சட்டி பானை வனைவோர்

# இந்திய மீனவரை கட்டுப்படுத்தாவிடின் வடக்கு மீனவர்கள் நஞ்சு குடிப்பர்

## வடமராட்சி மீனவசமாசத்தலைவர் தெரிவிப்பு

இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்து இலங்கையின் மீன்வளத்தை அழிக்கும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணாவிட்டால் வட பகுதி மீனவர்கள் மருந்து குடிக்க வேண்டிய நிலை ஏற்படும் என வடமராட்சி மீனவ சமாசத் தலைவர் அருள்தாஸ் தெரிவித்தார்.

மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணாவிட்டால் இன்னும் இரண்டு மாதங்களில் இது நடைபெறுவது உறுதி என அவர் குறிப்பிட்டார்.

இந்திய மீனவர்கள் நாளாந்தம் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து இலங்கையின் மீன்வளத்தை அழித்து வருவதாகவும் அதற்கு இலங்கை கடற்படை அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அருள்தாஸ் உள்ளிட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்களை துப்பாக்கிச் சூடு நடாத்தி தடுக்கும் அதிகாரம் இலங்கை கடற்படைக்கு இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு கூறிய கருத்தை மீனவர்கள் வரவேற்றுள்ளனர்.

மற்றையவர்களது காணிக்குள் அத்துமீறி நுழைவது தவறு என்றும் மீனவர்கள் கூறியுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் அனுமதி அளிக்கக் கூடிய அளவிற்கு முறையான மீன்பிடித்தொழிலை இந்திய மீ‹ வர்கள் செய்வதில்லை என்றும் தடைசெய்யப்பட்ட வலைகள் மற்றும் ரோலர் படகுகளை கொண்டு மீன்பிடித்து இலங்கை மீன்வளத்தை அவர்கள் அழிப்பதாகவும் அருள்தாஸ் உள்ளிட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்களில் அநேகமானவர்கள் ரோலர் படகு வைத்திருக்கும் இந்திய முதலாளிமார்களின் கூலிகள் என்றும் இலங்கைக் கடற்படை அவர்களை தாக்குவதாகக் கூறுவது பொய் என்றும் வடமராட்சி மீனவர் சமாசத் தலைவர் அருளதாஸ் உள்ளிட்ட மீனவர்கள் கூறுகின்றனர்.

யுத்தத்தின் பின் நிம்மதியாக கடற்றொழிலில் ஈடுபட முடியும் என்ற நம்பிக்கையில் இருந்த தமக்கு ஏமாற்றமே எஞ்சியதாகவும் திட்டமிட்ட வகையில் தமிழர் பகுதி மீனவர்கள் மீது அழிப்பு நடைபெறுவதாகவும் மீனவர்கள் குற்றம் சுமத்தினர்.

தாங்கள் சட்டத்தை கையிலெடுத்து செயற்படவில்லை என்றும் ஆனால் கடற்படை தொடர்சசியாக தங்களுக்கு பாதகமாக நடந்து கொண்டால் தங்களது பிரச்சினையை தாங்களே தீர்த்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்றும் மீனவர்கள் குறிப்பிட்டனர்.

உள்நாட்டு மீனவர்கள் தங்கூசி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் போது அவர்கள் கைது செய்யப்படுவதாகவும் ஆனால் இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு எவ்வாறு அனுமதி அளிக்க முடியும் என்றும் மீனவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.



## க.பொ.த (சா/த) பெறுபேறுகள்

### ஒஸ்மானியாக் கல்லூரி

யாழ்.ஒஸ்மானியாக்கல்லூரியில் 06 மாணவர்கள் க.பொ.த. உயர்தர வகுப்புக்கு செல்வதற்கு தகுதி பெற்றுள்ளார்கள்

கடந்த 2014 டிசம்பர் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 17 மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். அவர்களில் ஆறு மாணவர்களான என்.சாலிஹா 5ஏ,2பி.,2சி, எச்.ஹயாஷா 4ஏ,4பி, சி., ஆர்.எப்.ஹஸ்னா 2ஏ,பி.,3சி,3எஸ்., எம்.எப்.சஹானி 2ஏ,2பி,3எஸ்.சி., என்.எம். பாரிஸ் ஏ,பி,சி,4எஸ்., எம்.எப்.அகீலா 2பி, 3சி, 3எஸ். ஆகியோர் க.பொ.த. (உ/த) உயர் கல்வி கற்க தகுதியடைந்துள்ளதாக கல்லூரி அதிபர் அ.மகேந்திரராசா தெரிவித்தார். (105)

### வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்

வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் 8 மாணவிகள் 9 பாடங்களிலும் அதி விசேட சித்திபெற்றுள்ளனர் என பாடசாலையின் அதிபர் அருட்சகோதரி திரேசம்மா சில்வா தெரிவித்துள்ளார்.

வவுனியாவின் முன்னணிப்பாடசாலைகளில் ஒன்றாக இக்கல்லூரியில் இருந்து கம்சனா மகேந்திரன், இலக்கியா கேதீஸ்வரன், கேதிகா சண்முகானந்தன், திவியா திருநாவுக்கரசு, தபோசினி சூரியச்செல்வன், நிலாணி சிவராஜா, நிதுர்சா வதனகுமார், தனுராகவி தாமோதரபிரசாத் ( ஆங்கில மொழிமூலம்) ஆகியோர் அதி விசேட சித்திகளைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை ஆங்கில மொழிமூல மாணவர்கள் உட்பட 22 மாணவிகள் 8 பாடங்களில் அதி விசேட சித்திகளையும் ஒரு பாடத்தில் பி தர சித்தியையும் பெற்றுள்ளனர். (70)

### நயினாதீவு கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்

நயினாதீவு கணேச கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் 18 மாணவர்கள் க.பொ.த.உயர்தரம் படிக்கத் தெரிவாகியுள்ளனர். அவர்களில் 7பேர் திறமைச்சித்தி பெற்றுள்ளனர். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

ஜெ.கிருஷாயினி .3A .2C. 2S, சி .பவித்திரா .A ,B .3C,2S, கோ .நிதர்சன் A ,B,3C,3S, சி .சஞ்சீவன் A .B .5C ,S, யோ அனோசியா A 4C,2S,ப .துஜீபன் A,2C 5S, ப .சங்கீத் B ,2C .4S

## - சாதாரணதர பெறுபேறு -

# முதல் பத்து இடங்களில் தமிழ் மாணவர்கள் இல்லை

(கொழும்பு)

வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரணதரப்பரீட்சைப் பெறுபேறுகளின்படி முதல்பத்து இடங்களுக்குள் தமிழ் மாணவர்கள் எவரும் இல்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி கொழும்பு நாலந்தா கல்லூரியைச் சேர்ந்த தரிந்து நிர்மல் என்ற மாணவன் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தையும், கம்பஹா ஹொலி குரோஸ் கல்லூரியைச் சேர்ந்த சந்தினி நவரஞ்சன இரண்டாம் இடத்தையும் பிடித்துள்ளார்.

விசாக்கா கல்லூரியைச் சேர்ந்த அமாலி நிவரத்தன மற்றும் கண்டி மஹாமாயா கல்லூரியைச் சேர்ந்த எச்.அபேசிங்க, ரத்னாவலி மகளிர் மகா வித்தியாலய மாணவி நுவனி நெத்சரனி ஆகியோர் அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளனர்.

மற்றும் தேவினி ருவன்கா ஹேமசிங்க விசாகா மகளிர் மகா வித்தியாலயம், திவ்யாஞ்சலி உத்தரா ராஜபக்ஷ - தேவி பாலிகா மகா வித்தியாலயம், ரன்சிக லசன் குணசேகர- தேரஷடன் கல்லூரி, திலினி சந்துனிகா பரிஹக்கார - சுஜதா கல்லூரி, அஞ்சன ரெவிரங்க அபயதீப மதரசிங்க - மொரவக்க கீர்த்தி அபேவிக்ரம மத்திய மகா வித்தியாலயம் மாத்தறை முறையே அடுத்தடுத்த இடங்களினைப்பிடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வளலாயில் மீள்குடியமர 181 குடும்பங்கள் பதிவு

கடந்த 25 வருடங்களாக உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட வளலாய் பகுதியில் மீளக்குடியமர்வதற்கு 181 குடும்பங்கள் வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

வளலாய் பகுதியில் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட மக்கள் தற்போது தமது காணிகளை துப்புரவு செய்கின்றனர். அவர்களுக்கு உடனடித் தேவையான கத்தி, கோடரி, குப்பைவாரி போன்ற உபகரணங்களை 50 குடும்பங்களுக்கு வழங்கினோம்.

காணி உறுதி வழங்கப்பட்ட குடும்பங்களுக்கு துப்புரவு பணிக்கு என தலா 13 ஆயிரம் ரூபாய் காசோலை வழங்கப்பட்டது. மக்கள் கோரிக்கைக்கு அமைய 1000 லீற்றர் கொள்ளளவுடைய 5 நீர்த்தாங்கிகள் மூலம் நீர் விநியோகம் செய்து வருகின்றோம் என்றார்.

# கொக்குளாயில் விபத்து ஒருவர் பலி; ஒருவர் காயம்

முல்லைத்தீவு, கொக்குளாய் பகுதியில் நேற்று முன்தினம் முச்சக்கர வண்டி எருமை மாடு ஒனறுடன் மோதியதில் முச்சக்கர வண்டியில் பயணித்த ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

உடப்பலமுல்லை பொல்ஹாவெல பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சிசிரசிந்தக கருணாரட்ண வயது 29 என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது நண்பரின் இடமான முல்லைத்தீவு கொக்கிளாய்க்கு வருகை தந்த குறித்த நபர் நண்பருடன் முச்சக்கரவண்டியில் சென்று கொக்கிளாய் மகா வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள குளமொன்றில் குளித்து விட்டு வீடு திரும்பும் போது திடீரென குறுக்கே வந்த எருமை மாடு ஒன்றுடன் மோதியதால் இச் சம்பவம் இடம்பெற்றது.

இவருடன் பயணம் செய்த குமார்(வயது 27)என்பவரும் படுகாயமடைந்தார். இவர்கள் புதுக்குடியிருப்பு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிசிரசிந்த கருணாரட்ண உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ.ப)

# 125 ஆவது ஆண்டு மலருக்கு ஆக்கங்கள் சேகரிப்பு

(வவுனியா)

இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாயலத்தின் 125 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் பாடசாலையினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது தலைமையில் முகாமைத்துவக்குழு, பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இவ் விழா கொண்டாடப் படவுள்ளது. இதனையொட்டி 125 ஆவது ஆண்டுக்குரிய சிறப்பு மலர் வெளியீடும் இடம் பெறவுள்ளதால் இப் பாடசாலையுடன் தொடர்புடையவர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

ஆக்கங்கள் வழங்க விரும்புவோர் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக பாடசாலையில் மலர் வெளியீட்டுக்கு பொறுப்பானவர்களிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : அ. ஆயிஷா

முகவரி : காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்

அகவை 4 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ஐ. அஸ்பா

முகவரி : காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்

அகவை 4 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



# அமெரிக்காவின் வான்தாக்குதலையும் மீறி வளர்ச்சியடைந்துவரும் ஐ.எஸ்.ஐ.எஸ்.

## சிரிய ஜனாதிபதி தெரிவிப்பு



ஈராக் மற்றும் சிரியாவிலுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டுவரும் வான்வழித் தாக்குதல்களையும் மீறி, ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு தன்னை விரிவுபடுத்தி வருவதாக சிரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சிபிஎஸ் நியூஸ் என்ற ஆங்கிலத் தொலைக் காட்சிக்கு சிரிய ஜனாதிபதி அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகள் மீது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் கடந்த ஆண்டு முதல் வான்வழித்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

எனினும், அந்த அமைப்பு தொடர்ந்து ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

சிரியாவில் ஒவ்வொரு மாதமும் ஆயிரம் பேரை ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு சேர்த்து வருவதாக சில கணிப்பீட்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த வான்வழித் தாக்குதல்கள் ஆரம்பித்ததில் இருந்தே ஐ.எஸ்.ஐ.எஸ்அமைப்பு தன்னை விரிவுபடுத்திவருகின்ற நிலையில், லிபியாவிலும் அந்த அமைப்பு கிளையை ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, எகிப்து, யேமன ஆகிய நாடுகளில் உள்ள தீவிரவாத அமைப்புகள், ஐ.எஸ்.ஐ.எஸ அமைப்புக்கு தங்கள் விசுவாசத்தைத் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஞாயிறு குருத்தோலை தினத்தையொட்டி ஸ்பெயின் தலைநகர் மட்ரிட் நகரில் மதத்தலைவர்கள் பேரணியாகச் சென்றபோது..

## தமிழக உட்கட்டமைப்புத்துறையில் சீனா அதிக முதலீடு செய்ய வேண்டும்



தமிழகத்தில் உட்கட்டமைப் புத்துறையில் சீனா அதிக முதலீடுகள் செய்ய வேண்டும் என அந்நாட்டு தூதரிடம் முதலமைச்சர் ஒ.பன்னீர்செல்வம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கான சீன தூதர் லீ யுசென் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் தமிழக முதலமைச்சர் பன்னீர் செல்வத்தைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது எதிர்வரும் மே மாதம் சென்னையில் நடைபெறவுள்ள முதலீட்டாளர்கள் மாநாட்டில், சீன தொழில்திபர்கள் பங்கேற்குமாறு முதலமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, தமிழக முதலமைச்சர் பன்னீர் செல்வத்தை சீனாவுக்கு விஜயம் செய்யுமாறு தூதர் அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னையில் சீனாவின் துணைத் தூதரகம் விரைவில் அமைக்கப்படும் என அந்நாட்டு தூதர் தெரிவித்ததாகத் தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## விவசாயிகள் பேரணியில் பங்கேற்பார் ராகுல்காந்தி



டில்லியில் எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும் விவசாயிகள் பேரணியில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி பங்கேற்பார் என கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக அதன் துணைத் தலைவர் ராகுல் காந்தி விடுமுறையில் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவர் நாடாளுமன்ற வரவு செலவுத் திட்டக் கூட்டத் தொடரில் பங்கேற்கவில்லை.

இந்த நிலையில் அவர் எங்கிருக்கின்றார் என்பது குறித்து தெளிவு படுத்தப்படாமல் இருந்ததுடன் நிலம் கையகப்படுத்தும் பிரேரணைக்கு எதிராக எதிர்வரும் 19 ஆம் திகதி டில்லியில் நடைபெறும் விவசாயிகள் பேரணியில் ராகுல் காந்தி பங்கேற்றுப் பேசுவார் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

## செஞ்சிலுவைச் சங்க ஊழியர் மாலி நாட்டில் உயிரிழப்பு


சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊழியர் ஒருவர் மாலி நாட்டில் உயிரிழந்துள்ளார். மாலி நாட்டின் காகோ நகரிலிருந்து நியாமி நகரை நோக்கி சென்று கொண்டிருந்தபோதே இனந் தெரியாத முஸ்லிம் தீவிரவாத குழுவால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் இன்னுமொருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுககான மருத்துவ சேவையைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பயணித்த போதே இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயமடைந்த ஊழியர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பயணித்த வாகனமும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் குறித்த தாக்குதலுக்கு பொறுப்புக்கூறவில்லையென ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## அமெரிக்க தேசிய பாதுகாப்பு வலயத்தில் பொலிஸார் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் தலைமையகத்திலுள்ள பாதுகாப்பு வலயத்தில் இனந்தெரியாத நபர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பாதுகாப்பு வலயத்திற்குள் இரண்டு சந்தேக நபர்கள் நுழைய முற்பட்ட வேளையில் பொலிஸ் அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.



இதில் சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் மற்றைய நபர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ அதிகாரியொருவர் காயமடைந்துள்ள நிலையில், தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் இருவரும், பெண்கள் அணியும் உடையணிந்து, திருடப்பட்ட கார் மூலம் வந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள், பெண்கள் போன்று எதற்காக உடையணிந்து வந்தார்கள் என்பது குறித்து தீவிர விசாரணை நடாத்தப்பட்டு வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேக நபர்களுடைய வாகனத்தில் இருந்து, அதிகளவிலான போதைப் பொருட்களும், துப்பாக்கியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## மலையிலிருந்து உருண்டுவிழுந்த பேருந்து பெருவில் 19 பயணிகள் உயிரிழந்தனர்




பெருவில் மலை மீது பயணித்த பேருந்து உருண்டு விழுநததில் 19 பயணிகள் உயிரிழந்ததுடன் 37 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்து பெருவிலில் இந்த மாதத்தில் இடம்பெற்ற மற்றுமொரு பாரிய விபத்து என பெருந் போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெருவின் தெற்கு பிராந்தியமான அயாகுசோவில் நேற்று முன்தினம் காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இந்நிலையில் காயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


மேலும் விபத்து இடம் பெற்றதற்கரன காரணம் அறியப்படாத நிலையில் மோசமான காலநிலையால் இந்த விபத்து சம்பவித்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அத்துடன் விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக பெருவிலில் தொடர்சியாக பெய்து வரும் மழையினால் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு அபாயங்களால் அப்பகுதி மக்கள் இன்னல் பட்டு வருகின்றனர். மேலும் கடந்த வாரமும் பெருவில் இதுபோன்றதொரு விபத்துச் சம்பவத்தின்போது 34 பயணிகள் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அளவு விளம்பரத்திற்கு

1000/= ரூபா மட்டுமே

# ஊழியர்களின் நிரந்தர நியமனம் பிரதமரிடம் அவசர கோரிக்கை



அரசின் சுற்றறிக்கைகளின்படி தற்காலிக, அமைய (நாளாந்த), பதில் கடமை ஒப்பந்த மற்றும் சலுகை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட வடக்கு மாகாண சபையின் கீழுள்ள திணைக் களங்களில் பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கும், தேசிய பாடசாலைகளில் பணியாற்றும் கனிஸ்ட தர ஊழியர்களுக்கும் இலங்கை போக்குவரத்துச்சபையின் வடக்கு மாகாண சாலைகளில் கடமையாற்றுகின்ற ஊழியர்களுக்கும் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும், யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் ஒரு தொகுதி சுகாதாரத் தொண்டர்களுக்கும்,

2015ஆம் வருட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமைவாக நிரந்தர நியமனங்கள் காலக் கிரமத்தில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த 27ஆம் திகதி பிரதமர் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த நிலையில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கடந்த காலங்களில் டக்ளஸ் தேவானந்தா எம்.பியால் வடக்கு மாகாணத்தில் பல்வேறு துறை சார்ந்து பலருக்கு நிரந்தர நியமனங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த நிலையில், மேலும் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டியவர்கள் தொடர்பில் அவதானஞ் செலுத்தப்பட்டே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வரிச்சலுகை...

தூதுவர் டேவிட் டேலி நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தார்.

இதன் போதே இது தொடர்பாக பேசப்பட்டுள்ளது.

மேலும் அங்கு இலங்கை மீன்கள் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை நீக்குதல் மற்றும் ஜி.எஸ்.பி சலுகையை மீண்டும் வழங்குவது தொடர்பாக கூடிய அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தூதுவர் டேவிட் டேலி இதன் போது ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார்.

இலங்கை அரசாங்கமானது மனித உரிமைகளை உறுதிப்படுத்தல் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பல் போன்றவற்றிற்கு முன்னெடுக்கும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் இதன் போது இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் பாராட்டுகளைத் தெரிவித்ததாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## கோடரி...

இடத்தைச் சேர்ந்த ஜெயராஜா சிவநேசன் (வயது-38) என்பவர் படுகாயமடைந்து பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இப்பகுதியைச் சேர்ந்த இருவரை பளைப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## கள்ள...

அவரது சகா ஒருவரையும் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு தற்போது அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கந்தபுரம் இரண்டாம் வாய்க்காலைச்சேர்ந்த நடராசா டெனிஸ் ராஜ் என்ற குறித்த பிரதேச சபை உறுப்பினர் கடந்த மாதமும் இவ்வாறே சட்டவிரோதமாக கள்ள மரம் வெட்டிய போது பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி பொலிஸாரினால் விடுவிக்கப்பட்ட நிலையிலேயே கடந்த வாரமும் இச்சம்பவம் இடம பெற்றுள்ளது. இவர் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் சகோதரன் என்பதும் குறிப்பிடத்தக்கது

ஒரு கௌரவ பிரதேச சபை உறுபபினர் சமூகத்தில் முன்மாதிரியாக இருக்க வேண்டியவர்கள் இவ்வாறு தொடர்ச்சியாக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது (29)

## நீதிபதிகள்...

பவன் நியமிக்கப்பட்டுள்ளதோடு, சந்திரா ஏக்கநாயக்க மற்றும் பிரியசாத் டெப் ஆகியோரும் இதில் அடங்குகின்றனர்.

இதன்படி இன்று 19ஆம் திருத்தச் சட்டம் குறித்து இதுவரை தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்களும் விசாரணை செய்யப்படவுள்ளன.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கான திருத்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த திருத்த சட்டமூலத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வரை 18 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பிரபல சட்டவுரைஞர் கொமின் தயாசிரி, பிவிதுரு ஹெல உறுமய செயலாளர் உதய கம்பன்பில மற்றும் நுகேகொடையைச் சேர்ந்த எல்.பி.ஐ பெரேரா, தலவத்து கொடையைச் சேர்ந்த தர்ஷன வீரசேகர, வண. பெங்கமுவே நாலக்க தேரர், கோட்டை வீதியைச் சேர்ந்த வணிகசேகர, வண. மாத்தறை ஆனந்த சங்கர தேரர் மற்றும் அத்துருகிரியவைச் சேர்ந்த வீரதுவ ஆகியோரே இந்த மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

ஜனாதிபதியின் அதிகாரங்கள், அரசாங்கத்தின் அதிகாரங்கள், அடிப்படை உரிமைகள் என்பன திருத்தப்படவுள்ள இந்த 19ஆவது திருத்தத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையும் சர்வஜன வாக்கெடுப்பின் அங்கிகாரமும் தேவையென மனுதாரர்கள் தங்களுடைய மனுவில் கூறியுள்ளனர். மனுவின் பிரிதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

மேற்படி திருத்த சட்ட மூலம் விசேட சட்டமூலமாக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். *(மற்றுமொரு செய்தி உள்ளே...)*

# கிழக்கு மாகாணசபையில் சலசலப்பு புதிய பிரதித்தவிசாளர் நியமனம்

கிழக்கு மாகாண சபையின் தவிசாளரான ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சந்திரதாச கலபதி தலைமையில் கிழக்கு மாகாண சபை அமர்வு நேற்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சபையின் அமர்வு நேற்றுக் காலை கூடிய வேளையில் பிரதித் தவிசாளராக இருந்த எம்.எஸ். சுபைருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவாம் இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்தார்.

பிரேரணைக்கு ஆதரவாக 19 உறுப்பினர்களும் எதிராக 11 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

புதிய பிரதித் தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் இந்திரகுமார் பிரசன்னா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சபைத் தவிசாளர் இல்லாத நிலையில் சபையைக் கூட்டுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அறிவித்திருந்தும் அதனைப் புறந்தள்ளிவிட்டு சபை நடவடிக்கைகளைப் புறக்கணித்து மாகாண சபை அமர்வுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பிலிருந்து தவறியிருந்தார் என்பதே பிரதித் தவிசாளர் சுபைருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிராதான நம்பிக்கையில்லாத் தீர்மானமாகும் என மாகாண சபை உறுப்பினர் ஆர். துரைரெட்ணம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 11 மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்துள்ளனர்.

நேற்றைய அமர்வில் ஆளும் கட்சிகளைச் சேர்ந்த மூவரும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த மூவருமாக மொத்தம் ஆறு பேர் சபை அமர்விற்கு வந்திருக்கவில்லை.

## ஞானசார தேரர் மீது விசேட பொலிஸார் விசாரணை

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மதத்தை அடிப்படையாக வைத்து தனி நபர்களுக்கும் சமூகங்களுக்கும் எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளை குறித்தே ஞானசார தேரரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பௌத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சின் விசேட பொலிஸ் பிரிவினால் இவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கப்ராலிடம்...

டொலரிலும் குறைந்த போது இந்த ஒப்பந்தம் பாரிய நட்டத்துக்கு வழிசமைத்தது.இதனால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 500 மில்லியன் அமெரிக்க டொலரை இழக்க நேரிட்டது.

இலங்கை உயர் நீதிமன்றம் மத்திய வங்கியின் விசாரணை முடியும் வரையில் சர்ச்சைக்குரிய ஹெஜிங் கொடுப்பனவை 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நிறுத்தி வைத்தது. இந்த தீர்ப்பை எதிர்த்து, சி.ஐ.ரி.ஐ வங்கி ஸ்ராண்டட் சாட்டட் வங்கி, டொச் வங்கி ஆசிய வெளிநாட்டு வங்கிகள் சிங்கப்பூரிலுள்ள நடுத்தீர்ப்பு குழுவுக்கும் லண்டன் வர்த்தக மேல் நீதிமன்றிலும் வழக்குத் தொடர்ந்தன.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் டொச் வங்கியுடனான வழக்கில் தோல்வி கண்டு 60 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டத்துக்கு உட்பட்டது. ஸ்ராண்டட் சாட்டட் வங்கிக்கு 162 மில்லியன் அமெரிக்க டொலர் வட்டியையும் செலுத்துமாறு ஒரு ஐக்கிய இராச்சிய நீதிமன்று தீர்ப்பளித்தது. அத்தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டில் அரசாங்கம் 2012 ஆம் ஆண்டு யூலை தோல்வி கண்டது.

அமெரிக்காவிலுள்ள நடுத்தீர்ப்பாளர் டொச் வங்கிக்கு சார்பான தீர்ப்பை வழங்கி அதற்கு 60.3 மில்லியன் அமெரிக்க டொலரை வட்டியுடன் செலுத்துமாறு கட்டளையிட்டது.இந்நிலையிலேயே மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரிடம் நிதி மோசடி விசாரணைப்பிரிவு விசாரணை நடத்தியது.

## தமிழர்...

லாளர் நாயகம் கடந்த காலங்களில் எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் சுமுகமான பேச்சுவார்த்தைகளின் ஊடாகத் தீர்த்துக்கொள்ளக்கூடிய வாய்ப்புகள் எமக்குக் கிடைத்திருந்தும், அவ்வாய்ப்புகளை சரிவரப் பயன்படுத்திக் கொள்வதற்கு சுயலாப தமிழ் அரசியல் தலைமைகள் தவறியதால் எமது மக்களின் பிரச்சினைகள் பல தீர்க்கப்படாத பிரச்சினைகளாகவே உள்ளன. இவ்வாறான தமிழ்த் தலைமைகளின் தவறான வழிகாட்டல்களே பாரிய அழிவுக்குள் எமது சமுதாயத்தை தள்ளியும் விட்டது.

அந்த வகையில், முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தின்போது, எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை அடங்கலாக ஏனைய பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய ஓர் அரிய வாய்ப்பு கிடைத்திருந்தது. அந்த வாய்ப்பையும் இன்றைய சுயலாப தமிழ் அரசியல் தலைமைகளின் முன்னோடிகள் அன்று புறக்கணித்தனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டு, குறிப்பிட்ட கால வரையறைக்குள் எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை உட்பட அடிப்படைப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் எட்டப்பட உத்தேசிக்கப்பட்டிருந்தது. அந்த வாய்ப்பையும் அக்குழுவில் கலந்துகொள்ளாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது சுயலாபம் கருதிப் புறக்கணித்து வந்தது.

இப்போது இன்னுமொரு வாய்ப்பு தற்போதைய ஜனாதிபதியால் உருவாக்கித் தரப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பையாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தவறவிடாது, சரிவரப் பயன்படுத்தி. எமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வரவேண்டும். தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் எனும் உண்மையான அக்கறை இருப்பின் இவ்வாய்ப்பை நிச்சயம் அவர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள். என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இனியும்...

மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பார் என எதிர்பார்த்தபோதும் துரதிர்ஷ்டவசமாக அது வெற்றியளிக்கவில்லை என சம்பந்தன் தெரிவித்திருந்தார்.

அந்த வேளை சம்பந்தனின் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்துகொண்டு சந்திரிக்காவிடம் எவ்வாறான உறவு இருந்தது என எல்லோருக்கும் தெரியும்.

தனியே சிங்கள மக்களின் வாக்குகளை நம்பியுள்ள சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களுக்கு எதையும் செய்யப்போவதில்லை. சந்திரிகா செய்வார் என சொல்வது அப்பட்டமான பொய்யான கருத்து.

ஆட்சி மாற்றத்தை சரியான முறையில் பயன்படுத்தவேண்டும் என்பது காலம்கடந்தது ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் பேரம் பேசி வாக்குறுதிகளை பெற்றிருக்கவேண்டும் அது தான் சந்தர்ப்பம் தமிழ் மக்களின் வாக்குகள் ஆட்சிக்கு வருவது மட்டும்தான் என்பதற்கு இவர்கள் துணை போனது தான் தவறு பேரம்பேசியிருந்தால் இந்த நிலை வந்திருக்காது இதைத் தெரிவித்த எங்களை மகிந்தவுக்கு ஆதரவானவர்கள் என்றார்கள் இப்போது எல்லாம் புரியும். சந்தர்ப்பத்தை கைவிட்டு சந்தர்ப்பம் இருக்கிறது நம்புங்கள் என்று தெரிவிப்பது மிக மோசமான ஒரு பொய்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பதிவு செய்வது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார். எல்லாரும் ஏற்றால்தான் பதிவு செய்யமுடியுமாம் தான் சர்வாதிகாரி இல்லையாம்.

எங்களைப்பொறுத்தவரையில் பதிவு செய்து இவர்கள் எதையும் சாதிக்கப்போவதில்லை பதிவு முக்கியம் இல்லை. கொள்கை தான் முக்கியம் பெரும்பான்மையான கட்சிகள் விரும்பியும் அதை செய்யாதது ஏன்? ஜனநாயகம் மாறிவிட்டதா? எமது மக்கள் மிக பாதிக்கப்பட்டுள்ளார்கள் இந்த பாதிப்பு வீணான பாதிப்பாகக் கூடாது.

புதிய அரசு வந்தபின்பும் எந்த மாற்றமும் இல்லை. காணாமற்போகிறார்கள், காணிகள் சுவீகரிக்கப்படுகின்றன, புலனாய்வாளர்களது செயற்பாடுகள் எல்லாம் இன்றும் நடக்கிறது இது வயதான சம்பந்தனின் மூளைக்கு எட்டவில்லையோ தெரியாது ஆனால் எமக்குத் தெரியும்.

இந்த நிலையில் மக்களை காக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு அனைவரும் விழிப்புடன் செயற்படவேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் தெரிவித்தார். (இ.25)

# சிறுமியை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள தியாகி அறக் கொடை சிறுவர் இல்லத்தில் இருந்து பதினொரு வயது சிறுமி ஒருவர் நேற்று காணாமற் போயுள்ளார்.

நிஷாந்தன் டிலக்ஷி என்ற சிறுமியே நேற்று பிற்பகல் சிறுவர இல்லத்திலிருந்து காணாமற் போயுள்ளதாக சிறுவர் இல்ல நிர்வாகத்தினரால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (25)

# கூட்டமைப்புக்கு புதிய யாப்பு நெருக்கடியை சமாளிக்க முயற்சி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்மைபபில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளும் தொடர்ந்து இணைந்து செயற்படும். இதற்கென புதிய யாப்பொன்றை உருவாக்கி அதன் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். - இவ்வாறு தெரிவித்துள்ளார் கட்சியின் பேச்சாளர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்சியாகப் பதிவு செய்வதில் உள்ள நெருக்கடிகள, அடுத்தகட்டச் செயற்பாடுகள் குறித்து ஆராயும் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி முடிவு எடுக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

நேற்றைய கூட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி சார்பாக க.சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், க.சர்வேஸ்வரன், துரைரட்ணசிங்கம் ஆகியோரும் தமிழரசுக்கட்சி சார்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் ரெலோ சார்பாக செல்வம் அடைக்கலநாதன், ஹென்றி மகேந்திரன், சிறிகாந்தா ஆகியோரும் புளொட் சார்பில் ஆர்.ராகவனும் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பு குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து இயங்கும். புதிய யாப்பொன்றை உருவாக்கி அதனடிப்படையில் நான்கு கட்சிகளும் செயற்படுவது என்றும்,



கட்சியை பதிவு செய்வது குறித்தும், அடுத்த கட்ட நகர்வுகள் குறித்தும், புதிய யாப்பை உருவாக்குவது குறித்தும் எதிர்வரும் 7ஆம் திகதி மீண்டும் கூடி ஆராய்வதென்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது என்றார் அவர்.

# செயலாளர்களுக்கு திடீர் இடமாற்றம்

வட மாகாண சபை அமைச்சின் செயலாளர்கள் சிலர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி முதலமைச்சர் அலுவலகச் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் ஆகியோரே இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளதாக, வட மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி இன்று முதல் குறித்த இடமாற்றங்கள் அமுலுக்கு வரவுள்ளன. (25)

# போதைப்பொருட்களை வைத்திருந்த மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

போதைப்பொருட்களை பாவனைக்காக வைத்திருந்த மூவரை நேற்று முன்தினம் மாலை யாழ்.பொலிஸார் கைது செய்துள்ளனர்.


310 மில்லி கிராமளவிலான குடு போதைப் பவுடரை பாவனைக்கான நிலையில் வைத்திருந்த வேளை இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இம்மூவரும் 44,27,35 வயதுடையவர்கள் எனவும் தமிழ் சிங்கள இனத்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மூவரையும் விசாரணையின் பின்னர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்போதைப் பொருள் எவ்வாறு இவர்களுக்கு கிடைத்தது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்னர். (இ.ப)

# தந்தை செல்வாவுக்கு யாழில் அஞ்சலி



(யாழ்ப்பாணம்)

தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில், யாழ்.பொது நூலகத்திற்கு அருகாமையில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் உள்ள தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், தந்தை செல்வா சதுக்கத்தில் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதன்பின்னர் யாழ். தந்தை செல்வாவின் சதுக்கத்திற்கு வடமாகாண சபை உறுப்பினர்கள் உட்பட மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். (25)

# சிறுமி மரணம்

குடம் ஒன்றில் கிடந்த மர்மப்பொருள் வெடித்ததில் படுகாயமடைந்த சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் மாலை பூமரங்களிற்கு நீர் ஊற்றுவதற்காக குடத்தை எடுத்து அதற்குள் இருந்த பொருளை வெளியேற்ற முற்பட்ட போது குடத்தினுள் இருந்த பொருள் வெடித்துள்ளது.

இதனால் படுகாயமடைந்த சிறுமி உடனடியாக கந்தளாய் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டாள். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகத் தெரியவருகின்றது.

# நல்லூரில் மகளிர் தின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

நல்லூரில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் சி.தவராசா கலந்து சிறப்பித்தார்.

பெண்களுக்கான சிறந்ததொரு நாடு என்ற தொனிப் பொருளில் மகளிர் தின நிகழ்வை நட்சத்திர பெண்கள் மகளிர் விவகார குழு ஏற்பாடு செய்திருந்த்து.

இதில் நல்லூர் பிரதேசசபை உதவிச் செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன், நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ரவீந்திரதாசன் கிராம அலுவலர் சு.சந்திரகுமார் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் சு.சுபநாதன் பொதுமக்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மகிந்த மீதான மனு நீதிமன்றில் தள்ளுபடி

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது நாட்டின் பல பகுதிகளுக்கும் இராணுவத்தை அனுப்பி பொதுமக்களின் அடிப்படை மனித உரிமையை மீறினார் என்ற குற்றச்சாட்டில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக முன்னிலை சோஷலிச கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை, உயர் நீதிமன்றம், நேற்று நிராகரித்தது.

முன்னிலை சோஷலிசக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் துமிந்த நாகமுவவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மனுவின் பிரதிவாதிகளாக மகிந்த ராஜபக்ஷ, முப்படைத் தளபதிகள், தேர்தல்கள் ஆணையாளர், பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

அதன்படி பிரதி வாதிகளுக்கு நீதிமன்றம் அழைப்பு விடுத்திருந்தது. இந்நிலையில்,



இந்த குற்றச் சாட்டுக்களுக்கான போதிய சாட்சிகள் இல்லாத காரணத் தால் உயர்நீதிமன்றம் அந்த மனுவை நிராகரித்தது.

# மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகை



பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்புப் பேரணி மீது கொள்ளுப்பிட்டி சந்தியில் நேற்று பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தும் இந்த எதிர்ப்பு பேரணி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

ஹைலெவல் வீதியூடாக இந்தப் பேரணி கொள்ளுப்பிட்டி சந்தியை வந்தடைந்த போது பொலிஸார் அதற்கு தடை ஏற்படுத்தினர்.


## மரண அறிவித்தல்

**பழனிநாதன் கஜந்தன்**

[வெற்றிலைக்கேணி முள்ளியான்]

**வெற்றிலைக்கேணி முள்ளியானைச் சேர்ந்த பழனிநாதன் கஜந்தன் (30.03.2015) நேற்று முன்தினம் அகாலமரணமடைந்துள்ளார்.**

**இறுதிக் கிரியைகள் இன்று மதியம் 12 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் வெற்றிலைக்கேணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.**

தொடர்புகளுக்கு
0768625583
ப.பிரகாஸ் (இ)

தகவல்
குடும்பத்தினர்


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.